Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(168)

முடிவு அவள் கையில்

பொன்னரசி கோபாலரத்தினம்

பதிப்பகம்
முத்தமிழ் வெளியீட்டு மன்றம்
யாழ்ப்பாணம்.
2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு அவள் கையில்

நூலாசிரியர்:	பொன்னரசி கோபாலரத்தினம்
வெளியீடு:	முத்தமிழ் வெளியீட்டு மன்றம், 314, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம், இலங்கை.
அச்சகம்:	பாரதி பதிப்பகம், 430,காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
உரிமம்:	திருமதி பொ.கோபாலரத்தினம், மோலோய், நோர்வே.
முதற்பதிப்பு:	2004
பக்கங்கள்:	vii +72
விலை:	ரூபா:175

Mudivu Aval Kayyil

Author:	Mrs. Ponnarasi Gopalaratnam. Gate 4, NR. 103. 6700, Måløy Norway.
e.mail:	gopojj@online.no
Publication:	Muthamil Veliyeeddu Mantram, 314, Chemmany Road, Nayanmarkaddu, Jaffna. Sri Lanka.
Printer:	Bharathy Pathippakam, 430,K.K.S.Road, Jaffna, Sri Lanka.
First Edition:	2004
Pages:	vii + 72
Price:	Rs:175

894.8113
கோபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

இதுவரை தமிழ்நாட்டுச் சமூகச் சூழ்நிலையையும் இலங்கைச் சூழ்நிலையையுங் களங்களாய்க் கொண்டே தமிழ் ஆக்க இலக்கியம் பெரும்பாலும் எழுந்து வந்துள்ளது. ஆனால் இன்று இந்த எல்லைகளைக் கடந்து தமிழர் புலம்பெயர்ந்து வாழும் உலகின் பல நாடுகளின் வாழ்க்கைச் சூழ்நிலைகளைக் களங்களாகக் கொண்டும் தமிழிலக்கியம் தோன்றத் தொடங்கியுள்ளது. புலம்பெயர்ந்தோர் பற்றிப் புலம்பெயர்ந்தோர் படைத்துவரும் இந்த இலக்கியங்கள் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் என்ற புதிய பெயர் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுகின்றன.

புலம்பெயர்ந்து புதிய புதிய சமூகங்களில் வாழும்போது எம் உறவுகள் சந்திக்கும் புதிய புதிய பிரச்சினைகள், புதிய புதிய புறச் சூழல்கள், நம்மின தனித்துவப் பண்பாடுகள் பழக்க வழக்கங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் சவாலாக நிற்கும் அவ்வந் நாட்டுப் பண்பாடு, பாரம்பரியங்கள், சூழ்நிலைகள், பிரச்சினைகள் போன்றவற்றின் தாக்கங்களால் எழுந்த உணர்வு நிலைகளின் பிரதிபலிப்புகளாக எழும் இப்புலம் பெயர்ந்தோர் இலக்கியங்கள் உலகளாவியதாகிய, ஒரு புதிய பரிமாணத்தைத் தமிழிலக் கியத்துக்கு வழங்கியுள்ளன.

புலம் பெயர்ந்தோர் இலக்கியங்களின் மிகப்பெரிய பெறுபேறு எனக் கருதப்படுவது, பல நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழரும் பிற்சந்ததிகளும் என்றென்றும் தமிழையே பேசவும் எழுதவும், தமிழ்ப் பண்பாடுகள், பழக்க வழக்கங்களை உயிராக மதித்துக் கடைப்பிடித்து ஒழுகவும் விரும்பவைத்துத் தமிழ் வாழ்வு வாழவைப்பதேயாகும்.

இங்கு பிறந்து, தமிழ்ப் பண்பாட்டில் ஊறிவளர்ந்து - தமிழ் மொழிமூலம் கற்று, வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இன்றைய தலைமுறைத் தமிழர்களுக்கு இவ்வாறு தமிழில் இலக்கியங்கள் படைக்கும் ஆற்றல் இருப்பது புதுமையன்று. ஆனால் இவர்களின் பிள்ளைத் தலைமுறைகள், பேரத் தலைமுறைகள், பிற்சந்ததிகள் தமிழல்லாத - அவ்வந் நாட்டு மொழிகளிலேயே உயர் கல்விவரை கற்றுக்கொண்டு, அவ்வச் சமூகப் பண்பாடுக ளிலேயே தொட்டில் வயதிலிருந்து ஊறி வளர்ந்துகொண்டு, தமிழ் தெரியாமலும் தாராளமாக வாழ முடியும் என்ற நிலையில், இரவு பகல் தொழிற்சாலைகளிலேயே கிடந்து இயந்திரங்களாகிவிட்ட அப்பா அம்மாவால், நமது மொழி, நமது பண்பாடுகள் என்பவை புகட்டப்பட முடியாமல் அந்நியமாகவே வளரும் அந்த நிலையில், தேவாரங்களைக் கூடத் தாம் வதியும் நாட்டு மொழி எழுத்துக்களிலேயே எழுதிப் பாடமாக்கும் நிலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்ட சோகநிலையில் அவர்கள் தமிழில் வாசிக்கத்தான் முடியுமா? இலக்கியம் படைக்கத்தான் முடியுமா?

இச்சந்ததிகள் தமது இன அடையாளங்களைத் தனித்துவங்களைப் பேணிக் கடைப்பிடித்தொழுகி, அதன்மூலம் உலக இனங்களின் கணிப்பைப் பெற்ற பெருமிதத்தோடு தலைநிமிர்ந்து வாழ்ந்து, தொடர்ந்தும் தமிழில் இலக்கியம் படைக்கும் நிலைமையை உறுதிப்படுத்தும் வகையில் நம் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் இன்று அமையவேண்டும்.

இலக்கியச் சஞ்சிகைகள் போடும் தாளத்துக்கும், விமர்சகர்களின் பாராட்டைப் பெறுவதையே நோக்கமாகக்கொண்டு அவர்களது தாளத்துக்கும் ஆடும் தமிழ் எழுத்தாளர் பலர் போல அல்லாது, எங்கள் புலம்பெயர் சந்ததிகள் எங்கெங்கும் சுய கௌரவம் பேணி வாழத் தடையாகவுள்ள ஏது நிலைகளை இனங்கண்டு களைந்தெறிய வழிகாட்டும் - ஊக்கமளிக்கும் சிந்தனைகளின் தொகுப்புகளாகப் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும்.

இத்தகைய உன்னத இலட்சியத்தோடு தொலை நோக்கோடு திருமதி பொன்னரசி கோபாலரத்தினம் நோர்வேயில் இருந்து "முடிவு அவள் கையில்" என்ற கதைத் தொகுதியை எழுதியுள்ளார்.

இந் நூலில் இடம்பெறுங் கதைகள் வெள்ளைத்தோற் சுதேசிச் சகமாணவர்களால் குடியேறிகளான தமிழ்ப் பிள்ளைகள் "மண்ணிறத்தோலர்"களெனப் பழிக்கப்படும் வேதனை, வெப்பச் சுவாத்தியத்துக்கே பிறப்பிலிருந்து பழகிப்போன நம்மவர்களின் உடம்புகள் கடுங்குளிரும், உறைபனியுமாக வதைக்கும் தாங்கொணாச் சுவாத்தியத்தின் சவாலுக்குக் கணந்தோறும் பதில் சொல்லவேண்டிய உத்தரிப்பு, இதன் மத்தியிலும் ஐந்தாறு இடங்களுக்கு மாறிமாறிப் பறந்தோடித் தினம் பதினெட்டு மணி நேரம் வரை கைசோர மெய்சோர உழைக்கவேண்டிய துயர், அடிக்கடி விபத்துக்களுக்குள்ளாகும் அவலம், "காசனுப்பு" என வின்னப்பிக்கும் கடிதமாகவே இருக்கும் என்ற அச்சத்தோடே ஸ்ரீலங்காக் கடிதங்களைச் சராசரிப் புலம்பெயர்ந்தோர் கையிலெடுக்கும் கேவலநிலை, வரவுக்குத் தகச் செலவும் மிகுந்த நாட்டு அன்றாட - குடும்பத்தேவைகள் பற்றிய கவலை, பராமரிப்பு நிலையங்களில் தமது மடிக்குழந்தைகளைக் கூடக் கதறக் கதற ஒப்படைத்து வேலைக்கு ஓடும் அந்த அன்னையரின் நெஞ்சைப் பிழியும் விம்மல் பொருமல்கள், பெற்றோரின் பாசமறியாமல், செவிலி வளர்த்த பிள்ளைகளின் முரண் மனப்பாங்கு வளர்ச்சிகள் காரணமாகப் பிற்காலத்தில் அவர்களில் வெளிப்படும் முரண் நடத்தைகள் ஊட்டும் நெஞ்சுக் கலக்கம், அவ்வந் நாட்டுப் பழக்கவழக்கங்களுள் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாதவற்றைத் தம் குழந்தைகள் பழகிவிடாமல் தடுக்கத் தோற்றுத் தோற்று முயலும் பெற்ற மனங்களின் அழுகை, புதுமோடிச் சேலைக்கும், செல்லிடத் தொலைபேசிக்கும் உந்துருளிக்கும் கூடக் காசனுப்பும்படி மகன்மாரை மட்டுமன்றி மகள்மாரைக் கூடத் துளைத்தெடுக்கும் தாய்மண்ணவர்களின் அரக்கத்தனங்கள் - இவற்றையெல்லாம் துல்லியமாக - கலை நயத்தோடு, நெஞ்சைத்தொடும் வகையில் படம்பிடித்துக் காட்டும் பெறுமதிமிக்க கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புலம்பெயர் தமிழரின் வாழ்வு ஆனந்தமயமானதன்று, அவலங்கள் மயமானது" என்பதே உண்மை என்பதை நாம் உணரவைக்கிறார் கதாசிரியர். ஊதாரித்தனங்களுக்காக ஊரிற்கும், ஆடம்பரங்களுக்காக வீட்டிற்கும் பணத்தை அள்ளியிறைப்பதைக் குறைத்து, தம் வேலை நேரத்தைக் குறைத்து, முடிந்த அளவு வீட்டில் மனைவி மக்களோடு நிம்மதியாக மகிழ்ந்திருந்து, தம் பிள்ளைகளின் மனோ வளர்ச்சியைத் தமிழ்க் கல்விப் பண்பாட்டு வளர்ச்சியை மேம்படுத்தி வாழவேண்டும் என்ற நன்மை பயக்கும் குறிக்கோளை அக்குடும்பத் தலைவர்களின் மனங்களில் வேர்விட வைக்கும் பயன்மிக்க கதைகள் இவை.

இவற்றுள் "கண்கெட்டபின்" என்ற நெஞ்சை உருக்கும் கதை, "நல்வாழ்வு" என்ற ஊடலிலும் உவகை ததும்பும் கதை முதலான பல கதைகள் சிறுகதைக்குரிய இலக்கணம் கொண்டவை. பல கதைகள், சின்னஞ்சிறு கதை வகையைச் சேர்ந்தவை- இரத்தினச் சுருக்கமானவை.

புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களின் வருகை காலமெல்லாம் தொடர்வதற்கான அத்திபாரமிடும் "முடிவு அவள் கையில்" தொகுதிபோல திருமதி பொன்னரசி கோபாலரத்தினம் அவர்கள் ஏராளமாக எழுதவேண்டும் என வாழ்த்துகின்றேன். அம்மையாரின் இனவுணர்ச்சியையும் பொதுநலம் நாடும் ஆக்கங்களையும் கவிஞர் மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்கள் தமது பணித்தொடரில் தமிழுலகுக்கு வெளிக்கொணர்வது பாராட்டுக்குரிய பணி என்பதும் மிகையன்று.

- ச.வே.பஞ்சாட்சரம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
15.03.2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

இக் கதைகள் 1990 ஆம் ஆண்டில் இருந்து 2002 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள், நோர்வே நாட்டின் மோலோய் என்னும் இடத்திலுள்ள தமிழர் சங்கத்தினால் வெளியிடப்படும் "எமது சஞ்சிகை" என்னும் காலாண்டுச் சஞ்சிகையில் வெளிவந்த சிறு கதைகளாகும்.

நாம் இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து இங்கு வாழ்ந்தாலும் எமது எண்ணங்கள், சிந்தனைகள் தாய் நாட்டைச் சுற்றியே இருக்கின்றன. அந்தச் சிந்தனையின் வெளிப்பாடே இச் சிறுகதைகள்.

நோர்வே நாட்டு மக்களுடன், இவர்களது பண்பாட்டுடன் நாம் எப்படி வாழ் கின்றோம் என்பதை மையமாகக் கொண்டும் இங்கு எமது அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சில நிகழ்வுகளை மையமாகக்கொண்டும் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

இது எனது கன்னி முயற்சி. தவறுகள் இருப்பின் மன்னிக்கவும்.

இந்நூலுக்குரிய அணிந்துரையைச் சிறந்த ஈழத்துக் கவிஞர்களுள் ஒருவரும் சிறுகதை, நாவல் ஆசிரியர்களுள் ஒருவருமான பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் சிறப்பாக எழுதி வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றிகள் உரியன.

இந் நூலுக்குரிய அட்டைப் படத்தையும் பிற படங்களையும் சிறப்பாக வரைந்து வழங்கிய ஓவியர் 'ரமணி' அவர்களுக்கும் இந்நூலை முந்திய எனது நூலைப்போலச் சிறப்பாக அச்சிட்டுத் தந்துள்ள யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகத்தினருக்கும், சிறப்பாக, உரிமையாளர் இ. சங்கர் அவர்களுக்கும் இந்நூலைப் பதிப்பித்து வெளியிடுவதற்கு உதவிய மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

மோலோய்,
நோர்வே.
01.04.2004

பொன்னரசி கோபாலரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

அணிந்துரை	iii
முகவுரை	vi
சமர்ப்பணம்	vii
1. நோர்வேயில் ஒரு நாள்	01
2. என்னையும் மதியுங்கள்	07
3. எயர் லங்கா	10
4. முடிவு அவள் கையில்	13
5. கவலைகள் என்றும்	17
6. என்னையும் புரிந்துகொள்ளுங்கள்	20
7. காற்றில் கரையும் ஓலம்	23
8. மனம்	27
9. இதுதான் தலை விதியா?	31
10. காத்திருந்தவன்	35
11. கடமை	41
12. கண்கெட்டபின்	44
13. நல்வாழ்வு	48
14. தூரத்துப் பச்சை	52
15. நன்றிக்கடன்	56
16. யார் குற்றம்	60
17. அறஞ்செய விரும்பு	63
18. ஆறுவது சினம்	67
19. ஐயம் இட்டுண்	70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேயில் ஒரு நாள்

"டேய் ரவி! என்னடா இது, அலாரம் அடித்தது தெரியாமல் இப்படி நித்திரை கொள்கிறாயே?" பரத்தின் கத்தலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். 'ஓ! ஆறரை மணியாகிவிட்டதா? இன்று எப்படித்தான் எல்லா வேலைகளையும் முடித்து ஏழரைக்கு வேலைக்குப் போகப் போறேனோ?' யோசித்துக்கொண்டு, பாய்ந்து பாய்ந்து காலை அலுவல்களை முடித்து, கோப்பி ஊற்றி, சாப்பாடும் கட்டிக்கொண்டு ஜன்னலால் எட்டிப் பார்த்தேன்.

அந்தமாதிரி சிநோ(பனி) கொட்டி விட்டிருக்கிறது. 'இந்தச் சிநோவிற்குள் காரில் ஊர்ந்து ஊர்ந்து வேலைக்குப் போக அவன் அரை மணித்தியாலத்தை வெட்டிப் போடுவான். இனி என்ன செய்வது? என்னுடைய தலைவிதி அவ்வளவுதான்' என்று எண்ணிக் கொண்டு குளிருக்கு மாட்டுகிற எல்லாவற்றையும் அடுக்கிக்கொண்டு பூதம் மாதிரி காருக்கு ஓடினேன். 'ஊரில் சறத்துடன் சிகரட்டும் குடித்துக்கொண்டு எத்தனை இடங்கள் சயிக்கிளில் சுற்றியிருக்கிறேன். இங்கு இந்த நோர்வேக் குளிரில் இப்படி எல்லாம் செய்ய முடியுமா?' இதுவும் என் தலைவிதிதான்.

காரில் இருந்த சிநோவெல்லாம் தட்டிமுடித்து காருக்குள் ஏறும்போது தான் அப்பா காசு அனுப்பும்படி நேற்று போனில் சொன்னது ஞாபகத்துக்கு வர, திரும்பவும் வீட்டிற்குள் ஓடிச்சென்று தேவையானவற்றை எடுத்து வந்தேன். 'ஐந்த அப்பா, அம்மாவிற்கு எத்தனை தரம் காசு அனுப்பியாச்சு. இன்னமும் அரிப்புத் தாங்க முடியவில்லை. மூன்று தங்கைகளுக்கும் கல்யாணத்திற்கு என்று எத்தனை இலட்சங்கள் அனுப்பிய பின்னும் விடுகிறார்களில்லை. இப்பொழுது அவர்களது பிள்ளைப் பெறுவிற்கு ஒரு புறம்; பிள்ளைக்கு நக்கு அன்பளிப்புகள் ஒரு புறம்; பத்தாததற்கு மாப்பிள்ளைமார் வெளிநாடு போவதற்கும் பணம் அனுப்பட்டாம்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் இந்தக் குளிரில் நாள் முழுக்க ஓவர் டைம் வேலை என்று செய்து எத்தனை நாட்கள்தான் கஷ்டப்படவேண்டுமோ? மீன் பெட்டிகளைத் தள்ளும்போதும், அவற்றைத் தூக்கி வைக்கும்போதும் எத்தனை தரம் கால் கைகளில் போட்டு வேதனைகளை அனுபவித்திருக்கிறேன். இதெல்லாம் எங்கே எங்கள் வீட்டுக்காரர்களுக்குத் தெரியப்போகிறது? மகன் வெளிநாட்டில் வேலை என்று மாத்திரம் சொல்லிவிடுவார்கள். இங்கு எங்கள் நிலை? குளிரும் இருட்டும் இருக்கும்போது நித்திரையால் எழும்பவே மனம் வராது. எப்படியோ காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிறேன்'. கார் பக்டரி வாசலைத் தாண்டிப் போவதைக் கண்டுதான் என் நினைவுகளில் இருந்து விடுபட்டவனாகக் காரைத் திருப்பி பக்டரிக்குள் நிற்பாட்டிவிட்டு உள்ளே போனேன்.

எனக்கு முதலே என் நண்பர்கள் எல்லோரும் வந்து உடை மாற்றி வேலைக்கு ஆயத்தமாகி நின்றார்கள். "என்னடா ரவி. நேற்றுப் படம் பார்த்து விட்டுப் படுக்கநேரமாச்சுதோ?" என்னிடம் கேலியாகக் கேட்டார்கள் அவர்கள்.

"இந்த லொள்ளுதானே வேண்டாம் என்கிறது. நீங்கள் குடும்பஸ்தர்கள்; உங்களுக்கென்னடாப்பா பெண்டாட்டிமார் விடிய எழும்பிச் சாப்பாடெல்லாம் விதம் விதமாயச் செய்து, பார்சல் கட்டி, கோப்பியும் ஊற்றி வைப்பினம். நீங்கள் விடிய எழும்பி எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு வரவேண்டியதுதானே.எனக்கு அப்படியே?" என் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்தேன்.

"இங்கு எந்தப் பெண்டாட்டிமார் இப்ப விடிய எழும்பி இப்படிச் செய்து தருகினம். 'கோப்பி மெஷினில் கோப்பி போடுறதும் பாணை வெட்டிக் கட்டிக் கொண்டு போறதும் பெரிய வேலையோ? நீங்களே இதைச் செய்யுங்களப்பா' என்று சொல்லிவிட்டுப் படுத்துவிடுவினம். பிறகு என்ன வேற கதை கதைக்கேலுமே". இது சங்கரனின் அங்கலாய்ப்பு. "சரி அதைவிடு. ஏன் நீயும் ஒன்றைப் பார்த்துக் கட்டுறதுதானே! தலை மயிரும் நரைக்கப் போகுது. இப்படி எங்களைப் பார்த்துப் பெருமூச்சுவிடத் தேவையில்லையே!" கேட்டான் சங்கர்.

"இங்கேயா! எல்லாம் வெள்ளைத் தோல்காரிகள். அவர்களைக் கட்டிப் போட்டு பிறகு அவர்கள் விட்டுவிட்டுப் போனால் அவர்களின்ர பிள்ளைக்கும் சேர்த்துக் காசுகட்டச் சொல்லுறியோ? என்னால முடியாதப்பா இந்த வேலையெல்லாம்" என நான் கூறி முடிப்பதற்கு முன் சங்கர் இடை நிறுத்தி, "சரி சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிடி எல்லாம் விட்டுவிட்டு உன்னுடைய கல்யாணப் பேச்சுக்கள் எந்த அளவில் இருக்குது? எல்லாம் முற்றாகிவிட்டது, விரைவில் கொழும்பு வந்து இங்கு வருவதற்கான விசா ஒழுங்குகளை அவர்கள் செய்யவேண்டும் என்று சொன்னாய்? இப்ப எந்த அளவில் இருக்குது?" எனக் கேட்டான் ஆவலுடன்.

"கல்யாணம் பேசிய அந்தப் பிள்ளை, தன் தாய் தகப்பனுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு வரப்போவதாக அம்மாவும் அப்பாவும் ஒரு கிழமைக்கு முதல் கடிதம் போட்டிருந்தினம். பிறகு ஒரு மறுமொழியையும் காணேல்லை என்று பார்த்துக்கொண்டிருந்தேன். இரண்டு நாளைக்கு முன் என்னடாவென்றால் ஒரு ரெலிபோன் வந்தது". இப்படி நான் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது வேலை தொடங்க எல்லோரும் போவதைப் பார்த்தேன். "சரி சரி இப்ப இதைக் கதைக்க நேரம் இல்லை. சாப்பாட்டு நேரம் மிச்சத்தைச் சொல்லுறன்" என்று சொல்லிவிட்டு வேலை செய்யும் என் இடத்திற்குப் போனேன். மெஷின்களின் சத்தத்திலும், வேலையின் மும்முரத்திலும் நேரம் போனது தெரியவில்லை. சாப்பாட்டு நேரமும் வந்தது.

அங்கு சங்கர் திரும்பவும் என்னைப் பிடித்துவிட்டான். "என்னடா ரவி! ஏதோ ரெலிபோன் வந்ததென்றாய். பிறகு என்ன நடந்தது? அதைப் பற்றிச் சொல்லேன்" என்றான்.

"அது என்னவென்றால், எனக்குக் கல்யாணம் பேசிய பிள்ளையும் தாயும் கொழும்புக்கு வருவதற்கு முதல்நாள் கோயிலுக்குப் போனார்களாம். அப்பொழுது நடந்த குண்டு வீச்சுகளில் இவர்களும் அகப்பட்டுவிட்டார்களாம். அந்தப் பிள்ளையின் காலில் காயம் சரியாகப் பட்டு இப்ப காலையே வெட்டி எடுத்துவிட்டார்களாம். மற்றும்படி உயிருக்கு ஒரு ஆபத்தும் இல்லையாம். இதனால் இந்தக் கல்யாணம் நின்றுவிடுமோ என்று பயந்து அந்தப் பிள்ளையின் தகப்பன் அவசரம், அவசரமாகக் கொழும்பிற்கு வந்து எனக்குப் போன் பண்ணி விபரத்தைச் சொன்னார். தன்னுடைய மகளை இதற்காகக் கைவிட்டு விடவேண்டாம் என்றும் கெஞ்சினார்."

"நீ என்ன பதிலை அவருக்குச் சொன்னாய்?" இது சங்கரின் அவசரமான கேள்வி. "நான் என்னத்தைச் சொல்வது? எனக்கு இதைக் கேட்ட அதிர்ச்சியில் உடனே என்ன பதில் சொல்றது என்றே தெரியேல்லை. அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு எதற்கும் அம்மா அப்பாவுடன் கதைத்துவிட்டுப் பதில் சொல்றதாகச் சொல்லிவிட்டேன். இதற்கிடையில் நேற்று அப்பாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோனும் வந்தது." நான் சொல்லி முடிக்க முதல் அது என்ன என்பதை அறியும் ஆவலோடு சங்கர் என்னையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"சாப்பாடு முடிந்து வேலையும் தொடங்கிவிட்டது. வேலை முடியப் பிறகு எல்லாம் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு வேலை செய்யும் இடத்திற்கு அவசரம் அவசரமாக ஓடினேன். அங்கு தொடர்ந்து எனக்கு வேலையில் கவனம் செல்லவில்லை. எங்கள் நாட்டுப் பிரச்சினையால் இப்படி எத்தனை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று கைகால்களை இழந்து இருக்கி றார்கள். சாதாரண ஒரு குறையில்லாத பெண்ணுக்கே கல்யாணம் நடக்க பல பிரச்சினைகள் இருக்கும்போது இப்படிக் குறையான, அதுவும் கல்யாணம் பேசி முற்றுச்செய்த பெண்ணை, நான் இனிக் கல்யாணம் செய்யமுடியாது என்று சொன்னால், யார்தான் அந்தப் பிள்ளையைக் கல்யாணம் கட்டுவார் கள். கல்யாணம் முடிந்தபின் இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நான் வேண்டாம் என்று தள்ளி வைத்துவிடுவேனா? அல்லது எனது தங்கைமார்களுக்கு இப்படி ஒரு நிலை வந்தால் எப்படி இருக்கும் என்று ஒரு புறம் மனம் சிந்தித்தாலும் மற்றப்புறம்.....

'இலங்கையில் இருந்து கூப்பிட்டு, போயும் போயும் ஒரு நொண்டிப் பெண்ணையா கல்யாணம் கட்டப் போகிறாய்?' என்று மற்றவர்கள் கேலி செய் வார்களே; வாழ்நாள் முழுவதும் மனக் குறையில்லாமல் அந்தப் பெண்ணுடன் குடும்பம் நடத்த முடியுமா என்றும் மனம் சிந்திக்க, ஒருபுறம் பயமாகவும் இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் நான் எடுத்த முடிவுதான் சரி என்று இறு தியில் தீர்மானித்தவனாக, சிந்தனையிலிருந்து விடுபட்டு இவ்வுலக நினை வுக்கு வரவும், பக்கத்தில் இருந்த நொஸ்காரன் ஏதோ நொஸ்கில் என்னைத் திட்டவும் சரியாக இருந்தது.என்னால் வேலை தாமதப்படுகிறதாம் அவனுக்கு.

ஓவர் டைம் வேலை இல்லாததால் அன்று வேலை நேரத்திற்கே முடிந்துவிட்டது. உடுப்பெல்லாம் மாற்றி வெளியில் வரும்பொழுது, திரும்ப வும் சங்கர் நந்தி மாதிரி வாசலிலே நின்றான். "ரவி! அப்பா என்ன சொன்னார்? அந்தப் பிள்ளையைக் கல்யாணம் கட்டவேண்டாம் என்றுதானே சொன்னார்?" சங்கர் முடிக்கமுன் நான் அவனை இடைமறித்து "ஓ ஓ. அவர் அப்படித்தானே சொல்லுவார். எந்தத் தாய், தகப்பன்தான் தன்னுடைய மகனுக்கு இப்படி ஒரு நொண்டிப் பிள்ளையைக் கல்யாணம் செய்து வைப்பார்கள். அவர் சொன்ன திலும் ஒரு பிழையும் இல்லை. ஆனால் நான், அவரது எண்ணத்தை மாற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியும் ஒரு தமிழ்ப் பிள்ளைக்கு, அதுவும் இப்படியான நிலையில் இருக்கும் பிள்ளைக்குக் கட்டாயம் வாழ்வு கொடுக்கவேண்டும் என்று வாதாடினேன். அப்பாவும் ஒருவாறு என் எண்ணத்திற்கு உடன்பட்டார். ஆனால், அம்மா என்ன சொல்வாவோ என்று பயப்படுவதாகவும் சொன்னார்."

"பெண்ணான அம்மா ஒரு பெண்ணுக்கு இரங்கமாட்டாவா? எப்படியும் அவவின் சம்மதமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்". இதை நான் சொல்லி முடித்ததும் சங்கர் என்னை ஆச்சரியத்துடன் பார்த்து, "நீ இப்படி முடிவெடுத்ததுதான் சரி ரவி. பெண்ணுக்குப் பெரிய வடிவு, சீதனம் என்று எதிர்பார்த்துக் கல்யாணம் கட்டிய நாங்கள் கண்ட வாழ்க்கைதான் என்ன? உன்னிடம் என்றும் அன்பும், பண்பும், நன்றியும் உள்ளவளாக அந்தப் பெண் இருப்பாள். நீ அவளையே விடாமல் கல்யாணம் கட்டு. அப்ப! எங்களுக்கு ஒரு கல்யாணச் சாப்பாடு விரைவில் இருக்கிறதென்கிறாய்". சங்கர் கூறிவிட்டு விடைபெற்றான். ஊருக்குக் காசு அனுப்ப, பாங்கிற்கு போக நேரம் போய்விட்டதை உணர்ந்தவனாகக் காருக்கு ஓடுகின்றேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் மதியுங்கள்

இந்த அம்மாவுக்கு வேற வேலையில்லை. எந்த நேரமும் அதைத் தொடாதே, இதைச் செய்யாதே என்று ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பா. நான் சின்னப் பிள்ளையாம். ரேடியோ, ரீ.வி. போடக்கூடாதாம். ஏன்! நான் அவற்றைப் போட்டால் என்ன? எனக்கும் அவர்கள் மாதிரி அவற்றைப் போடத் தெரியும்தானே! என்ன இடைக்கிடை அதில் எல்லாவற்றையும் திருப்பி முறுக்கிப் பார்ப்பேன். அவ்வளவுதானே! இதற்குப்போய் அம்மா கத்துகிறா.

சரி அதைத் தொடக்கூடாது. அப்ப என்னுடன் விளையாட வாருங்கோ என்று கேட்டால் அக்கா படம் கீறவேண்டும் அல்லது படிக்கவேண்டும் என்பா. அம்மா சமைக்கவேண்டும் அல்லது ரீ.வி. பார்க்கவேண்டும் என்பா. அப்பாவோ "நான் வேலையால் களைச்சுப்போய் வந்திருக்கிறேன். என்னைக் கரைச்சல் படுத்தாதே" என்பார். பிறகு தான் மாத்திரம் பந்தடிக்கப் போய்விடுவார்.

வீட்டுக்குள்ளே இருந்தும் எவ்வளவு நேரம்தான் விளையாடுவது? வெளியில் போவோம் என்றால் உடனே அம்மா "வெளியில் குளிர் நான் வரவில்லை. நாங்கள் வீட்டிற்குள் இருந்து படம் பார்ப்போம்" என்பா. பிறகு என்ன! ஒரே படம்தான். எனக்கு இந்தப் படங்கள் ஒன்றுமே புரிவதில்லை. பாட்டுக்கள் சண்டைகள் கொஞ்சம் பார்ப்பேன். படத்தில் வந்த மாதிரி அக்கா வுடன் சண்டை பிடித்தால் "இவனைப் பாருங்கோ! எப்படி அக்காவை அடிக் கிறான்" என்று சொல்லி எனக்குத் திருப்பி அடிப்பார்கள்.

நான் ஏதாவது கதை கேட்டாலும் கதைத்தாலும் "பெரியவர்கள் கதைக்கும்போது குறுக்கே கதைக்காதே" என்று சொல்லி அப்பா, அம்மா இரண்டு பேருமே என்னை ஏசுவார்கள். ஆனால், தெரிந்தவர்கள் யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்தால் மாத்திரம் "என்ர பிள்ளையல்லோ! செல்லம்! உங்களுக்கு சொக்கிளற் வாங்கித்தாறன். எங்க! அந்தப் பாட்டி வடை சுட்ட கதையைச் சொல்லுங்கோ! எங்கட பிள்ளை கெட்டிக்காரன்" என்று கெஞ்சிச் செல்லம் விடுவார்கள். அவர்கள் விரும்பிய பொழுது மாத்திரம் நான் அவர்களுக்குக் கதை சொல்லவேண்டும். நான் பேசாமல் இருந்தால், கடைசியாக என்னை உறுக்கியும் கேட்பார்கள். நானும் அவர்களுக்குப் பயந்து, 'ஒரு ஊரில ஒரு பாட்டி இருந்தாவாம், வடை சுட்டாவாம், காக்கா வந்ததாம்' என்று முழுக் கதையையும் ஞாபகம் வைத்துச் சொல்லவேண்டும். இவ்வளவு சொன்ன பிறகும் கூட, "இவன் ஒரே குழப்படி. இவனுடன் காலம் தள்ளுவது பெரிய கஷ்டமாக இருக்கிறது" என்று சொல்லுவார்கள். இதைக் கேட்க எனக்கு எவ்வளவு மனக்கஷ்டமாக இருக்கும் என்று அவர்கள் யோசிப்பதில்லை.

சில வேளைகளில் கடைக்குக் கூட்டிப் போவார்கள். அங்கு அடுக்கி வைத்திருக்கும் சாமான்களைப் பாரக்க எனக்கும் ஆசையாக இருக்கும். ஒருக்கா தொட்டுப் பார்ப்பம் என்று கிட்டப் போனால் "ஏய்! இங்க வா! அங்கு ஒரு சாமானும் தொடப்படாது" என்று வெருட்டுவார்கள். தாங்கள் மாத்திரம் எல்லாச் சாமானையும் தொட்டுப்பார்த்து, கனக்கச் சாமான்கள் வாங்கு வார்கள். எனக்கும் சொக்கிளற் வேண்டும் என்று அழுதால், "கத்தி அழாதே! எல்லோரும் பார்க்கிறார்கள். வெட்கமாக இருக்கிறது. நீ வீட்டைவா! உனக்கு நல்ல அடி இருக்கிறது" என்று இரகசியமாக எனக்குச் சொல்லி, யாரும் பார்க்காது மெல்லமாக என்னை நுள்ளியும் விடுவார்கள். அங்கு இருந்த ஆட்கள் எங்களைக் கவனித்தால் மாத்திரம் "சரி! சரி! கத்தி மானத்தை வாங்காதே. எல்லாம் வாங்கித்தாறன" என்பார்கள். என்னை அழவிடாமல் முதலே இதை வாங்கியிருக்கலாம்தானே!

அவர்கள் இருக்கச் சொன்ன இடத்தில் இருந்து, சொன்ன நேரத்தில் படுத்தெழும்ப வேண்டும். அவர்கள் சொன்னமாதிரி எல்லாம் செய்ய நான் என்ன மெசினா? எனக்கு இரண்டு வயதுதான் முடிந்தாலும் ஏன் என்னையும் ஒரு மனுசனாக மதிக்கமாட்டார்கள்ளாம்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்களாவது என்னைப் புரிந்துகொண்டு, அப்பா, அம்மாவைக்கு நல்ல புத்திமதி சொல்லி என்னையும் மதிக்கச் சொல்லுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயர் லங்கா

'மகேசக்கா!.....மகேசக்கா!"

இப்பத்தான் மத்தியானச் சமையலுக்குக் கறியை அடுப்பில் ஏற்றி வைத்து விட்டு வந்து ஒரு புத்தகத்துடன் சாய்மனைக் கதிரையில் சாய்கிறேன். உடனே யாரோ கூப்பிடுகிற குரல் கேட்குது. வெளியில் வந்து பார்க்கிறேன். பக்கத்துவீட்டுப் பொன்னம்மாதான் கூப்பிட்டது.

"என்ன பொன்னம்மா, இந்த வெய்யிலுக்க? என்ன அவசரம்?"

"அது பெரிசாய் ஒண்டுமில்லை மகேசக்கா.... இவள் மாலா இண்டைக்கு யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போறாளாம். ஏதோ எயர் லங்காவோ, என்னவோ எண்டு ஏதோ புது சாறி வந்திருக்காம். அதில ஒண்டு வாங்கப்போறாளாம். அதுக்குக் காசு கொஞ்சம் பத்தாதாம். அதுதான் உங்களிட்டைக் கடனாய்க் கேப்பம் எண்டு வந்தனான். ஒரு இரண்டாயிரம் ரூபா தந்தியள் எண்டால் பெரிய உதவி. இவன் கண்ணன் நோர்வேல இருந்து இந்த மாசம் காசு அனுப்புறன் எண்டு சொன்னான். இன்னும் வந்தபாட்டைக் காணேல்ல"

பொன்னம்மா சொல்லி முடிக்கேல்ல, எனக்கு இவையள நினைச்சா அழுறதா சிரிக்கிறதா எண்டு தெரியேல்ல. இங்க சனம் சாப்பாட்டுக்குப் படுற பாட்டில இவையளுக்கு புதுப்புதுச் சாறி இப்ப தேவையாய்கிடக்குது! எல்லாம் வெளிநாட்டுக் காசு செய்யிற வேலை எண்டு மனதிற்குள் நினைக்கிறேன்.

"ஏன் பொன்னம்மா! போன மாசம்தானே உங்கடை சின்னவனும் நீங்களும் கண்ணனுடன் கதைத்து, சின்னவனையும் வெளிநாட்டுக்கு அனுப்ப எண்டு கொழும்புக்குப் போனீங்கள். அப்ப கண்ணன் காசு அனுப்பவில்லையா?"

"அதையேன் கேட்கிறியள் மகேசக்கா! அவன் தம்பி கண்ணனுக்கும் இப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேயில வேலை கொஞ்சம் குறைவாம். அதாலே கொஞ்சம் கஷ்டம் எண்ட மாதிரிக் கதைச்சான். நாங்களே விடுவம்! இங்க எவ்வளவு கஷ்டம், எப்படி எல்லாம் கஷ்டப்பட்டுக் கொழும்புக்கு வந்தம் எண்டதை விளங்கப் படுத்திச் சொல்லி, ஒரு மாதிரி அவனைக் காசு அனுப்பச் செய்துவிட்டுத்தான் வந்தம். காசு அனுப்பாமலே அவன் விடப்போறான். எப்படியும் அனுப்புவான்."

"என்னவோ நீங்கள் இப்படி அடிக்கடி உங்கடை மகனைக் காசு அனுப்பச் சொல்லிக் கஷ்டப்படுத்திறது எனக்கெண்டால் அவ்வளவு சரியாய்ப் படேல்ல பொன்னம்மா! அவையளும் அங்கை குளிரில என்ன கஷ்டப்பட்டு வேலை செய்யினமோ? அவையளும் தங்கட குடும்பம், குட்டி எண்டு பாக்கத்தானே வேணும். வெளிநாட்டில இப்ப எல்லாம் கறுப்புத்தோல், வெள்ளைத்தோல் எண்ட பிரச்சினை கூடிக்கொண்டு வருதெண்டு பேப்பரில படிச்சனான். நாளைக்கு ஒரு நிலை வந்து எல்லோரும் திரும்பிவந்தால், அவையளும் வெறும் கையோடதான் வரவேணும்."

"ஓ! அது சரிதான் மகேசக்கா....! எண்டாலும் நாங்கள் வளர்த்த பயிரின்ர பயனை அனுபவிக்காமல் விடலாமோ?"

"ஓ! ஓ! நீங்களும் உங்கடை தத்துவங்களும், கேக்கிறதுக்கு நல்லாத்தான் இருக்கு. அவசரத் தேவைக்கு காசு கேக்கத்தான் வேணும். இல்லை எண்டு சொல்லேல்ல. ஆனால் ஆடம்பரத் தேவைகளுக்கெல்லாம் பிள்ளையளைக் காசு கேட்டு கஷ்டப்படுத்திறது சரியில்லைத்தானே பொன்னம்மா! பிள்ளை களும் மனம் விரும்பி அனுப்புகிற காசுதான் எங்களுக்கு நிலைக்கும். அவையள் மனம் வருந்தி அனுப்புகிற காசு ஒரு நாளும் நிலைக்காது. என்னவோ இது என்ர அபிப்பிராயம் பொன்னம்மா. நீங்கள் என்னோட கோவிக்கப்படாது"

"....."

"என்ன பொன்னம்மா! கதையைக் காணேல்ல. சரி சரி பொன்னம்மா, எனக்கு அடுப்பில கறி எரியப் போகுது. பொறுங்கோ காசு கொண்டுவந்து தாறன்" எண்டு சொல்லிவிட்டுக் காசு எடுக்கப்போறன்.

உங்களுக்குச் சொன்னால் என்ன! இவ்வளவு தத்துவங்களையும் மகேசக்கா கதைச்சது காசு தராமல் கடத்தத்தான் எண்டு பொன்னம்மா நினைக்கப் போகிறா பாருங்கோ! அதுதான் காசு எடுக்க உள்ளே போறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவு அவள் கையில்

இலங்கையில் நல்லூரில் வாழ்ந்துகொண்டிருக்கும் ரவி, லலிதாவின் ஒரே அழகு மகள்தான் பிரியா. அவளுக்கு 24 வயது நடக்கின்றது. ஒரு டாக்டராகப் பட்டம் பெற்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இப்பொழுது வேலை செய்தும் வருகின்றாள். அவளது அழகு, கல்வித் தகைமை, செல்வத்திற்காக வெளிநாட்டு மாப்பிள்ளைகள் தொடங்கிப் பலர் அவளைத் திருமணம் முடிக்கக்கேட்டு வந்தார்கள். ஆனால், அவளோ இன்னும் சில வருடங்கள் தாய், தந்தையருடன் இருந்து யாழ் மண்ணில் சேவை செய்து விட்டுத்தான் திருமணம் என்ற கொள்கையில் இருந்ததால், வரும் திருமண வாய்ப்பை எல்லாம் தவிர்த்துவந்தாள்.

அன்று வேலைக்குச் சென்ற பிரியாவுக்குப் பிரசவம் ஒன்றைப் பார்க்கும்படி தலைமை டாக்டர் கட்டளையிட்டிருந்தார். பிரசவ அறைக்குச் சென்ற பிரியா பிரசவத்திற்கு வந்திருந்த பெண்ணைப் பார்த்துத் திடுக்கிட்டாள். ஏனென்றால் அந்தப் பெண்ணுக்கு 17 வயதுதான் நிரம்பியிருந்தது. அதுவும் திருமணம் முடிக்காத நிலையில் ஒரு குழந்தைக்குத் தாயாகி இருந்தாள். பிரசவ வேதனையிலும் பயத்திலும் கத்தியழுதபடி இருந்தாள். அங்கிருந்த தாதிமாரோ "இந்த வயதில் திமிரெடுத்து குழந்தையை வயிற்றில் வாங்கத் தெரிந்த உனக்குக் கொழுப்பா?" அடிக்காத குறையாக அந்தப் பெண்ணைப் பேசிக்கொண்டு இருந்தார்கள். பிரியாவுக்கு அவர்களைப் பார்த்துக் கோபம் வந்தது. "என்ன நிலைமையில் இப்படியானதோ! ஒருவரும் இங்கிருக்க வேண்டாம். எல்லோரும் முதலில் இங்கிருந்து போங்கள். நான் இந்தப் பிள்ளையுடன் ஆறுதலாகக் கதைத்து மனத் தைரியத்தை வரப்பண்ணப் போறன். குழந்தை பிறப்பதற்கு இன்னும் நேரம் இருக்குது. தேவையேற் படும்போது உங்களைக் கூப்பிடுகிறேன்" என்று சொல்லி அவர்களை வெளியில் அனுப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிள்ளையுடன் கதைத்தபொழுது, "இளம்பிள்ளைகளை, பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் அடிக்கடி கைதுசெய்து ஆமிக்காரர்கள் கூட்டிக்கொண்டு போவார்கள். ஒருமுறை அவர்களில் நானும் ஒருத்தியாகி விட்டேன். அங்கு ஒரு ஆமிக்காரனால் நான் இந்தநிலைக்கு ஆளாகிவிட்டேன். வீட்டில் விசயம் தெரிந்ததும் அம்மா, அப்பா என்னை அடித்துத் துன்புறுத்தினார்கள். வேதனையைச் சமாளித்துக்கொண்டு அவர்களுடன் காலம் கழித்தேன். குழந்தை உருவானதைப் பயத்தில் அம்மா, அப்பாவுக்குச் சொல்லாமல் மறைத்துவந்தேன். எனக்கு இது குழந்தைதான் என்று முதலில் தெரியவில்லை. வீட்டில் தெரியவந்ததும் காலம் கடந்துவிட்டது. எனது உடற் பலவீனத்தால் இந்தக் குழந்தையை அழிக்க வீட்டினர் முயற்சி செய்தும் முடியவில்லை. எனக்கோ ஒரு உயிரை அழிக்க விருப்பம் இல்லை. கடவுள் எனது வாழ்க்கையில் இப்படி ஒரு சோதனையைத் தந்துவிட்டார். அதற்காக நான் உத்தமி என்று வேடம் போடத் தயாரில்லை. நடந்தது நடந்துவிட்டது. எமது இனத்துக்கு வந்த சோதனைகளினால் எமது இன மக்களின் எத்தனை ஆயிரம் உயிர்கள் அழிந்துவிட்டன. அதனால் ஒரு உயிரை அழிக்க எனக்கு விருப்பம் இல்லை. நான் இந்தச் சிறிய வயதில் இந்தக் குழந்தையை ஏன் பெற்றெடுக்கப் போகின்றேன் தெரியுமா? என்னை இந்தக் கொடுமைக்கு உள்ளாக்கிய இந்தச் சிங்கள வெறியர்களை, எனது பிள்ளையைக் கொண்டே அழிக்கவேணும். இதுதான் எனது இலட்சியம். இதற்காக நான் என் வாழ்க்கையில் எத்தனை அவமானங்களையும் தாங்குவேன்." இதனை அந்தப் பெண் கூறிக்கொண்டிருக்கும் போதே அவளுக்குப் பிரசவ வேதனை கூடிச் சிறிது நேரத்தில் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது.

சிறிய வயதில் சரியான கவனிப்பு இன்றி, குழந்தையை வயிற்றில் சுமந்ததால் பிரசவத்தின் போது வலிப்பு ஏற்பட்டது.பிரியா அவளது உயிரைக் காப்பாற்ற எவ்வளவோ போராடினாள். தனது உயிர் பிரியப்போகின்றது என்று அறிந்தவுடன் அந்தப்பெண்ணும் "டாக்டர் எப்படியாவது என்ரை உயிரைக் காப்பாற்றுங்கோ. என் குழந்தையை, எனது அம்மாவோ, அப்பாவோ வேறு ஒருவருமோ காப்பாற்றப்போவதில்லை. அதனால் என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று சொல்லி டாக்டரின் கையைப்பிடித்துக் கெஞ்சினாள். பிரியாவும் அவளது உயிரைக் காப்பாற்றப் போராடினாள். ஆனால் அவளது முயற்சி வெற்றியளிக்கவில்லை. அவள் இறந்தபின் அவளது பெற்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது உடலை மாத்திரம் வாங்கிக்கொண்டு சென்றார்கள். இந்தக் குழந்தையை ஏதாவது அனாதை இல்லத்தில் சேர்த்துவிடும்படி சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

பிரியாவுக்கோ அந்தப் பெண்ணையும், அநாதையான அந்தக் குழந்தையையும் மறக்க முடியவில்லை. வீட்டில் தாய் தந்தையரின் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு அந்தப் பிள்ளையைத் தானே வளர்ப்பதாகத் தத்தெடுத்தாள். "இப்படி நீ குழந்தைகளைத் தத்தெடுப்பதென்றால் எத்தனை குழந்தைகளைத் தத்தெடுக்கவேண்டும். இவற்றுக்குத்தானே அனாதை விடுதிகள் பல இருக்கின்றன." பிரியாவின் தாய் தந்தையரும் இப்படிப் பலவிதமாகக் கூறிப் பிரியாவுடன் வாதாடிப்பார்த்தார்கள். "இந்தக் குழந்தை ஒரு சிறுமியின் வேதனையில், சிங்களத் தமிழ்க் கலப்புக்குழந்தையாகப் பிறந்தது. அனாதை இல்லத்தில் வளர்ந்தால் இந்தக் குழந்தைக்குப் பிற்காலத்தில் பல பிரச்சினைகள் ஏற்படும். அதனால் எனது பாதுகாப்பில் இந்தக் குழந்தையை வளர்க்கப்போகின்றேன். எனக்குத் திருமணம் என்பது வேண்டாம். அப்படித் திருமணம் செய்யவருகிறவர் இந்தக் குழந்தையுடன் என்னைத் திருமணம் செய்யச் சம்மதம் என்றால்தான் திருமணம் முடிப்பேன்". முடிவாகக் கூறினாள் பிரியா.

'இந்தக் குழந்தையின் தாய், குழந்தையைப் போராளியாக வளர்க்க வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் நான் இந்தக் குழந்தையை நன்றாகப் படிக்கவைத்துப் பலருக்கு உதவி செய்யும் மனிதனாக வளர்ப்பேன். இந்த டாக்டர் தொழிலில் இருந்து தினம்தினம் இந்த இனப்போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வரும் பலரைப் பார்த்தவள், இந்தப் போராட்டத்திற்கு இன்னும் ஒரு உயிரைப் பலிகொடுக்க விரும்பமாட்டேன்' என்று தனக்குள் முடிவெடுத்தாள் பிரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகள் என்றும்

வேலைக்குப் போவதற்காக ஆயத்தம் எல்லாம் செய்துவிட்டு யன்னலால் எட்டிப்பார்த்தேன். வெளியில் கொட்டியிருந்த பனியைப் பார்த்துத் திகைத்துவிட்டேன். இந்தளவு பனியா! இதற்குள் எப்படித்தான் வெளியே நடந்து போகப் போகின்றேனோ? முருகா! நீதான் என்னைக் காப்பாற்று என்று கடவுளை வேண்டிக்கொண்டேன். வழியில் யாரும் பார்க்காத இடத்தில் விழுந்து, பின் எழும்ப முடியாமல் இருந்தாலும், யாருக்காவது அறிவிப்ப தற்குக் கைத்தொலைபேசி இருந்தால் இருந்த இடத்திலிருந்து யாரையும் கூப்பிடலாம் என்று அதனையும் எடுத்துக் கைப்பையினுள் வைத்தேன்.

இந்த நாட்டில் குளிர் தொடங்கிவிட்டால் இது ஒரு தலையிடி. எப்ப இந்தக் குளிர் முடியும் என்று நாளை எண்ணிக்கொண்டு இருக்கவேண்டும். அடிமேல் அடியெடுத்து நடந்து ஒருவாறு வேலை செய்யும் இடத்திற்குப் போனேன். அங்கு போனதுதான் தாமதம் உனக்குப் பனி விருப்பமா? அல்லது உன்னுடைய நாட்டை நினைத்து ஏங்குகின்றாயா? நோர்வே நண்பிகளின் வழக்கமான பல்லவி. இது என்ன கேள்வி. எங்கள் நாட்டையும் அந்தச் சூழலையும் நினைத்து ஏங்காத நாள் உண்டா! சும்மா "யா யா" என்று சிரித்தபடி பதில் சொல்லிவிட்டு வேலையைத் தொடங்கினேன். எவ்வளவு கொடுத்துவைத்த சனங்கள். எங்களைப் போல் நாட்டுப் பிரச்சனையா? சொந்தக்காரர்கள், தாய், தந்தையரைப் பிரிந்து இருக்கும் கவலையா? எங்கள் கவலைகளில் எதைச் சொல்லுவது! எத்தனைதான் பிரச்சினைகள் இருந்தாலும் அதனை வெளிக்காட்ட முடியுமா? "வினயா! நீ ஏன் உன் மகளை நோர்வேப் பிள்ளைகளுடன் கூடுதலாகப் பழகவிடுவதில்லை? இங்கு இருக்கும் போது இந்தக் கலாசாரத்துடன் ஒட்டி வாழவேண்டாமா?" இப்படிப் பல நோர்வேக்காரர்கள் என்னிடம் கேட்கும்போது ஒரே எரிச்சலாக இருக்கும். அவர்களது பிள்ளைகள் கண்ட நேரத்தில் கண்டவர்களுடன் திரிவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையெல்லாம் எங்கள் பிள்ளைகளும் பழகவேண்டுமா? எந்த நாட்டில் இருந்தாலும் திருமணம் என்று வரும்போது ஒழுக்கமான பெண்ணின் வாழ்க்கைதான் பிரச்சினையின்றி இருக்கும் என்பதை விளங்கப்படுத்திச் சொல்வேன். அவர்களோ இது என்ன கலாசாரம் என்று விளங்கவில்லை என்பார்கள்.

ஊரில் எங்கள் ஊரைச் சேர்ந்த பெண் ஒருத்தி படிப்பதற்காகப் பல வருடங்களுக்கு முதல் இங்கு வந்தார். தாய், தந்தையரின் கட்டுப்பாடுகள் இல்லாததால், இந்த நாட்டவர் ஒருவருடன் திருமணம் முடிக்காமல் சேர்ந்து இருந்தார். பின் அவர்களுக்குள் பிரச்சினை ஏற்படப் பிரிந்தும் விட்டார்கள். அதன்பின் இன்னொரு தமிழ் ஆளைத் திருமணம் முடித்துக் குழந்தையும் பிறந்தபின், அந்தப் பெண்ணின் பழைய வாழ்க்கையினால் அவர்களுக்கிடையே எந்தநாளும் பிரச்சினைதான். இப்பொழுது திரும்பவும் திருமணம் முறியும் நிலைக்கு அந்தப் பெண் தள்ளப்பட்டுள்ளாள்.

இப்படி எத்தனைதரம் ஒரு பெண் திருமணம் முடிப்பது. தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையில் ஒரு முறை பிரச்சினையின்றித் திருமணம் நடப்பதற்கே எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் எங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கட்டுப்பாடாய் வளர்க்க வேண்டியது பெற்றோராகிய எங்கள் கடமையல்லவா? இதைவிட்டுவிட்டு இந்த நாட்டுப் பிள்ளைகளைப் போல் கண்டபடி நடக்க எங்கள் பிள்ளைகளையும் அனுமதிப்பதா? இங்கு இருப்பதற்கு வந்துவிட்டோம். இனிமேல் இந்தக் குளிரையும் பனியையும் நினைத்துக் கவலைப்படுவதை விட்டுவிட்டுப் பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்கவேண்டுமே என்று கவலைப்படுவோம் என்பதை எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். ஆக எப்படியிருந்தாலும் எங்கள் கவலைகள் என்றும் தீராதவைதான்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனையும் புரிந்துகொள்ளுங்கள்

எனக்கு இப்பொழுது வயது 14. நான் நோர்வேக்கு வந்து12 வருடங்கள் முடிந்துவிட்டன. எனது பிரச்சினையைக் கேட்டால் நீங்கள் ஒருவேளை சிரிக்கலாம். ஆனால் எங்கள் நிலைமையில் இருந்து இதனைச் சிந்தித்துப் பார்த்தால் உங்களுக்கும் இதன் தாக்கம் புரியும்.

அம்மா, அப்பாவை சொல்லுவினம் தாங்கள், இலங்கையில் படிக்கும் போது பாடசாலைக்குச் சீருடை (uniform) போட்டுக்கொண்டுதான் போனவர் களாம். அதனால் பணக்காரன், ஏழை என்ற வித்தியாசம் அங்கு தெரியாதாம். அதனால் எல்லோரும் நன்றாக, சிநேகிதமாகப் பழகினார்களாம் என்பார்கள். பாடசாலை நாட்கள் எவ்வளவு இனிமையானவை என்று சந்தோசமாகக் கதைப்பார்கள். அவர்கள் கொடுத்துவைத்தவர்கள். சொந்த நாட்டில் நிற வேறுபாடு என்ற துவேசமின்றி வளர்ந்தவர்கள். நாங்கள் இப்படியா? என்னைப் போன்ற தமிழ்ப் பிள்ளைகள் இங்கு படும்பாடு!

எங்களைக் கறுப்பர், மண்ணிற சீஸ்(Brunost) என்றெல்லாம் சொல்லிக் கேலிபண்ணும்போது எங்களுக்கு எவ்வளவு மன வேதனையாக இருக்கும் தெரியுமா? அவர்களுடன் எதிர்த்தும் சண்டை போடமுடியாது. மனதில் வைத்துக் குமுறிக் கொண்டு இருப்போம். இது மட்டுமா? எங்களுக்குப் பக்கத்தில் நின்றால் மணக்குமாம்! சாப்பாட்டு மணம் அதுவும் உள்ளி மணம் அவர்களுக்குப் பிடிக்காது. அதனால் உள்ளி போட்டுச் சமைக்காதேங்கோ என்று வீட்டில் அம்மாவுடன் சண்டைபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. மற்றவர்களுக்காக எங்கள் சாப்பாட்டைச் சமைக்காமல் விடுகிறதா? என்பது அம்மாவின் வாதம். எங்கள் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டுப் பாடசாலைக்குப் போகவே பயமாக இருக்கிறது. சென்ட் அடித்துவிட்டுப் போகலாம்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறீர்களா? அதுவும் நெடுகலும் கஷ்டம். எல்லா சென்டும் எல்லோருக்கும் ஒத்துக்கொள்வதில்லை, தலையிடிக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் நாங்கள் என்ன செய்வது?

இதைவிட உடுப்புத்தான் இன்னும் தலையிடி. இங்குள்ள இளைஞர்களும், இளம்பெண்களும் உடுப்புக்காக நன்றாகக் காசைச் செலவிடுவார்கள். இங்கு பாடசாலைக்குச் சீருடை இல்லை. அதனால் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் விதவிதமான உடுப்புகள் போட்டுக்கொண்டு பாடசாலைக்கு வருவார்கள். தாங்கள் போடுவது மாத்திரம் அல்லாது உடுப்பைப் பார்த்துத்தான் மற்றவர்களையும் மதிக்கிறார்கள். நல்ல உடுப்புகள் போடும் பிள்ளைகளைத் தான் சிநேகிதர்களாகவும் சேர்ப்பார்கள். இதனால் நாங்களும் நல்ல விலை கூடின விதவிதமான உடுப்புகள் போடவேண்டியதாக இருக்கிறது. இவற்றை வாங்கித்தரும்படி அம்மா அப்பாவிடம் கேட்கும் போதுதான் பிரச்சினையே தொடங்குகிறது. இவ்வளவு விலைக்கு வாங்கி உடுப்புகள் தர எங்களுக்கு முடியாது என்கிறார்கள். நாங்கள் இங்குள்ள செலவை மாத்திரமா பார்க்கி றோம். ஊரில் கஷ்டப்படும் எங்கள் பெற்றோருக்கும், சில உறவினருக்கும் கூட காசு அனுப்பவேண்டி இருக்கிறது. இந்த நிலையில் இவ்வளவு காசு உடுப்புக்குச் செலவழிக்க முடியாது என்கிறார்கள். அவர்கள் நிலையை நினைக்கப் பாவமாகவும் இருக்கிறது. ஆனால் நாங்கள் எப்படி இந்த உடுப்பு களை வாங்குவது?

இந்த இளவயதில் எங்களுக்குச் சிநேகிதர்கள் எவ்வளவு முக்கியம் தெரியுமா? எங்கள் எண்ணங்களைப் பரிமாறவும், சந்தோசமாகக் கதைத்து மகிழவும் பாடசாலை எவ்வளவு முக்கியமான இடம். இந்தப் பருவத்துச் சந்தோசம் வாழ்க்கையில் திரும்பவும் கிடைக்குமா? வீட்டிலும் அம்மா, அப்பா எங்களுடன் ஆறுதலாகக் கதைக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. வேலைக்குப் போய்வந்து வீட்டு வேலை, பின் ரீ.வி. பார்ப்பதிலேயே பொழு தைச் செலவிடுவார்கள்.

ஏதாவது கதைக்கப் போனாலோ "சத்தம் போடாதே,ரீ.வி.பார்க்கிறேன்" என்று எந்த நேரமும் ஏசுவார்கள். இந்த அம்மா, அப்பா ஏன் இந்த நாட்டுக்கு வந்தார்கள் என்று இருக்கிறது. வெளியில்போய் விளையாட பல சிநேகிதர் களும் இல்லை. குளிர் மழையினால் வெளியில் நின்று நெடுகலும் விளையா டவும் முடியாது.

இப்பொழுது சொல்லுங்கள் எனது பிரச்சினையும், என்போன்ற பல தமிழ்ப் பிள்ளைகளின் பிரச்சினையும் உங்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லையா? எங்கள் நிலையில் நின்று மனசாட்சியுடன் யோசித்து இதற்கு ஒரு முடிவு சொல்லுங்கள்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் கரையும் ஓலம்

"எமது விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்தைச் சென்றடைய இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கின்றன." விமானமோட்டியின் இந்தச் சொல்லைக் கேட்டதும் அந்த விமானத்தினுள் இருந்த குகனின் மனம் இனம்புரியாத ஒரு ஆனந்தத்தில் துள்ளியது. ஆறு வருடங்களுக்குப் பிறகு தாயை, தந்தையை, தாய்நாட்டை, சகோதரங்களைக் காண்பதற்காக நோர்வேயில் இருந்து வருகின்றவன்தான் குகன்.

விமானம் தரை இறங்கியதும் சோதனைகள் எல்லாம் முடிந்து வெளியே வந்தவனைக் கூட்டிப்போக அவனது சித்தப்பா வந்திருந்தார். தாய் நாட்டில் காலடி எடுத்து வைத்தது முதல் அவனது மனம் முழுவதும் பிறந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு எப்போது போவோம் என்ற சிந்தனையிலேயே இருந்தது. இதனால் சித்தப்பா கேட்ட குசலங்கள், கேள்விகள் எல்லாவற்றுக் கும் இயந்திரம் போல் பதிலளித்தான்.

"ஊரில் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்? ஊருக்குப் போய்வருவ தில் ஒரு பிரச்சினையும் இப்போது இல்லைத்தானே? எனக்கு ஆக மூன்று கிழமைகள்தான் லீவு இருக்கிறது. இதற்கிடையில் யாழ்ப்பாணம் போய்வர வேண்டும். அதனால் கெதியில் அங்கு போக ஒழுங்கு செய்து தாருங்கள் சித்தப்பா" கெஞ்சுவதுபோல் கேட்டான் குகன். "அங்கு நிலைமை அவ்வளவு சரியில்லாவிட்டாலும், கடவுளை வேண்டிக்கொண்டு நாளை அங்கு புறப்படு வோம். கப்பல் பயணம்தான். சமாளிப்பாயல்லாவா?" சித்தப்பா கேட்க எல்லா வற்றுக்கும் சரி என்று தலையாட்டினான் குகன்.

அடுத்தநாளும் வந்தது. கப்பலில் சித்தப்பாவுடன் பயணம்செய்யும் போது அவன் முன்பு கொழும்புக்கு வரும்பொழுது இரயிலில் ஏற்பட்ட பயண அனுபவங்களை நினைத்துப்பார்த்தான். அந்த நாளில் கொழும்புக்கு வருவதென்றால் அம்மா கொடுத்த முருங்கைக்காய்க் கட்டுடன் யாழ்தேவிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரயில் நிற்கமுதலே ஓடி ஓடிப் பாய்ந்து ஏறி இடம்பிடித்ததை நினைக்க இப்பொழுதும் சிரிப்பாக இருக்கிறது. இருக்க இடம் கிடைக்காமல் நின்ற நிலையில் தூங்குபவர்களும், சீற்றுக்கடியில் பேப்பர்களை விரித்துவிட்டுப் படுப்பவர்களும் என்று எத்தனைவிதமான மனிதர்களைத்தான் இரயில்களும் சுமந்து சென்றன. இப்பொழுதும் அவைகளைக் கேட்டால் எத்தனை சுயசரிதைகள் சொல்லும். இவற்றை நினைத்துப் பெருமூச்சுவிட்டான் குகன். கப்பலில் பக்கத்தில் இருந்தவரின் நச்சரிப்புத் தாங்காமல் எப்பொழுதடா யாழ் சென்றடையும் கப்பல் என்றிருந்தது குகனுக்கு. ஒரு வழியாகக் கப்பலும் அங்கு சென்று வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

நீண்ட நாட்களின்பின் தாய், தந்தையர், சகோதரங்களைக் கண்டதும் அவனது ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. ஒரு கிழமை எப்படிப்போனது என்றே அவனுக்குத் தெரியவில்லை. ஊரில் அவனுடன் திரிந்த நண்பர்களில் பலர் இறந்தும், சிலர் வெளிநாட்டிலும் இருப்பதால் பழைய சந்தோசமான நாட்களைப்போல் அவனுக்கு இப்பொழுது இருக்கவில்லை. உறவினர் வீட்டில் விருந்து என்று போய் வந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு ஊர்ச் சாப்பாட்டை உண்டு மகிழ்ந்து காலத்தைப் போக்கினான். தனக்கு 26 வயது முடியப்போகிறது,எப்படி அம்மாவிடம் தனது கல்யாணப் பேச்சை ஆரம்பிப்பது என்று யோசித்துக்கொண்டிருந்த குகனிடம் அம்மாவே அந்தப் பேச்சை ஒரு நாள் ஆரம்பித்தார். "குகா! இங்கு திரும்பவும் பிரச்சினை கூடப் போகிறது போல் இருக்கிறது. அதற்கிடையில் நீ திரும்பிப்போனால் நல்லது. உனக்கும் கல்யாண வயது வந்துவிட்டது. நீ போக முதல் கல்யாணம் முடித்துவிட்டுப் போனால் நல்லது என்று நாங்கள் நினைக்கிறோம். உனக்குக் கல்யாணம் பேசிக் கனபேர் இங்கு வருகிறார்கள். நானும், அப்பாவும் ஒருவருக்கும் இன்னும் சரியான பதிலைச் சொல்லவில்லை. நீ என்ன இதைப்பற்றி நினைக்கிறாய்?" தாயின் கேள்விக்கு "உங்களுடையதும், அப்பாவுடையதும் விருப்பம் என்ன?" என்று பதில் கேள்வி கேட்டான் குகன்.

"உண்மையைச் சொன்னால் எனக்கும், அப்பாவுக்கும் கடைக்கார மணியண்ணையின் மகளை நீ கல்யாணம் கட்டுவதுதான் விருப்பம். உனக்கு மணியண்ணையைத் தெரியும்தானே! நீ நோர்வேக்குப் போவதற்கு அவர்தான் முழுப்பணமும் தந்து உதவியவர். இப்ப எல்லாம் இழந்து சரியாகக் கஷ்டப்படுகிறார். அவரது மகள் ராஜி, அழகும் குணமும் உள்ள நல்ல பிள்ளை. அந்தப்பிள்ளை திருமணம் முடித்து ஒரு மாதத்திலேயே அவளது கணவன் குண்டுவீச்சில் இறந்துவிட்டான். 24 வயதில் அந்தப்பிள்ளை இப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப் பட்டமரமாக நிற்பதைப் பார்க்கச் சரியான வயிற்றெரிச்சலாக இருக்கிறது. சீதனமும் வடிவும் உள்ள மற்றப் பெண்களைக் கல்யாணம் முடிக்க எத்தனையோபேர் இருப்பார்கள். ஆனால் இப்படியான பிள்ளைக்கு வாழ்வு கொடுக்க ஒருவரும் வரமாட்டார்கள். அதனால் நீ அந்தப் பிள்ளைக்கு வாழ்வு கொடுக்கத்தான் வேண்டும்." அம்மா மூச்சுவிடாது இதனைச் சொல்லி முடித்தார்.

"என்னம்மா சொல்லுகிறீர்கள்! ஒரு விதவைப் பெண்ணைப் போய் என்னைக் கல்யாணம் கட்டச்சொல்லுகிறீர்களா? நோர்வேயில் எவ்வளவு வசதி, நல்ல உழைப்போடு நான் இருக்கிறேன். என்னுடைய தகுதிக்கு எத்தனைபேர் நல்ல சீதனத்தோடு பொம்பிளை தருவார்கள். போயும் போயும் ஒரு விதவையைக் கல்யாணம் கட்டச் சொல்லுகிறீர்களே! இது என்ன புதுக் கதையாக இருக்கிறது. இந்தக் கதையெல்லாவற்றையும் விட்டுவிட்டு, வேறு நல்ல இடமாகப் பாருங்கள்." எரிந்து விழுந்து தாயைப் பார்த்துக் கத்தினான் குகன்.

ஆத்திரத்துடன் சயிக்கிளையும் எடுத்துக்கொண்டு வெளியில் புறப்பட்டான். அவன் சைக்கிளில் புறப்பட்டுப் பத்து நிமிடம் இருக்காது, விமான இரைச்சலுடன் குண்டு வீச்சுக்களும் சரமாரியாகப் பொழியத்தொடங்கின. குகனின் மனம் பயத்தால் வெட வெட என்று நடுங்கத் தொடங்கியது. ஒளிப்பதற்கு இடம்தேடி ஓடினான். அதற்கிடையில் குண்டுச் சிதறல் ஒன்று அவனையும் முந்திக்கொண்டு அவனது மார்பைத் துளைத்துவிட்டது. நிலத்தில் சரிந்து விழுந்தான். "அம்மா! அம்மா!" என அலறினான். அதற்கு மேல் அவனால் கத்த முடியவில்லை. அவனது உயிர் மெல்ல மெல்ல இவ்வுலகை விட்டுப் போய்க்கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் அவனது உள்மனதோ(ஆத்மா) "அம்மா! என்னை மன்னித்துவிடு. உன்னிடம் எனது பணம், பகட்டு, வெளிநாட்டு வாழ்க்கை என்றெல்லாம் வீறாப்பாய்ப் பேசிவிட்டு வந்தேனே! இப்ப எனது இந்த உயிர் போகிற நேரத்தில் அவை எல்லாம் எங்கே? ஒன்றுமே துணைக்கு இல்லையே! நீ சொன்ன அந்த நல்ல காரியத்தைச் செய்திருந்தால் கடவுள் சிலகாலம் என்னை உயிர் வாழவிட்டிருப்பாரோ என்னவோ. இப்பொழுது ஒன்றும் இல்லாமல் இந்த உலகத்தைவிட்டுப் போகின்றேன். அம்மா என்னை மன்னித்துவிடு!" என்ற அவனது ஆத்மாவின் ஓலமும் மெல்ல மெல்லக் காற்றில் கரைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்

"விமலா இன்று மத்தியானம் டாக்டரிடம் போவதற்கு நேரம் எடுத்திருக் கிறது தெரியும்தானே! வேலையில் இருந்து லீவு எடுத்துவருகின்றேன். பன்னிரண்டு மணிக்கு வெளிக்கிட்டு ஆயத்தமாகி இரும்" கணவன் ரவி அவசரம் அவசரமாகக் கூறிவிட்டு வேலைக்கு ஓடுகின்றான். "எனக்கு ஏன் தான் இப்படி அடிக்கடி வருத்தம் வருகிறதோ?" மனதிற்குள் குமுறினாள் விமலா.

தாய் தந்தையருக்கு ஒரே மகளாகப் பிறந்த விமலாவிற்கு இப்பொழுது 35 வயது. தாய்,தந்தையர் இருவரும் இறந்துவிட்டனர். அவள் இலங்கையில் இருந்து நோர்வேக்கு வந்து 10வருடங்கள் சென்றுவிட்டன. அவளது கணவன், இரு குழந்தைகளுடன் வாழ்க்கையும் நிம்மதியாகப் போய்க்கொண்டிருந்தது. கடைசி ஐந்து மாதங்களாகத்தான் அடிக்கடி வருத்தம் வந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாள். வேலைக்குப் போய்த் தானும் உழைக்கும் கர்வத்துடன் வாழ்ந்தவள். இப்பொழுது வருத்தம் காரணமாகத்தான் வேலையையும் விட்டு விட்டாள். டாக்டரிடம் போவதற்கு முன் கடிதம் ஏதும் வந்தால் வாசித்து விட்டுப் போவோம் என்ற எண்ணத்தில் தபால் பெட்டிக்குள் இருந்து கடி தத்தை எடுத்துவந்தாள். இலங்கைக் கடிதத்தைக் கண்டதும் யாருடைய கடிதமாக இருக்கும் என்று யோசனையுடன் கடிதத்தைப் பிரித்தாள்.

"மாமாவின் மகள் சரோதான் கடிதம் போட்டிருக்கிறாள். வேறு என்ன! காசு அனுப்பும்படி கடிதம் போட்டிருப்பாள். அவர்களுக்கு என்ன வேலை. இதுவே வேலையாகப் போய்விட்டது. சொந்தக்காரர்கள் வெளிநாட்டில் இருந் தால் காணும். உடனே அவர்களுக்குக் காசு தவறாமல் அனுப்பவேண்டும்" மனதிற்குள் முணுமுணுத்தபடி கடிதத்தை உடைத்தாள் விமலா. அவள் நினைத்தது சரிதான். அண்மையில் நடந்த பிரச்சினையால் தங்கள் வீடு உடைந்துவிட்டதாகவும், அதனால் தாங்கள் அகதி முகாமில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகவும், தங்களுக்கு அவசரமாகப் பணம் தேவைப்படுவதால் விரை வில் பணம் அனுப்பும்படியும் கடிதத்தில் எழுதி இருந்தாள் சரோ.

முன்பு நாங்களும் இப்படிக் கலவரத்தால் எல்லாம் இழந்து ஏழையான பின், எங்களுக்கு உதவி செய்யும்படி எத்தனை தரம் அப்பா, அவர்களிடம் உதவி கேட்டவர்? அப்ப ஒரு உதவியும் செய்ய இயலாது என்று சொன்ன வர்கள். இப்ப நிலைமை தலைகீழ் ஆனவுடன் உதவி என்று வருகினம். இவர்களுக்குக் காசு அனுப்பிக் காட்டினால் நெடுகக் கேட்டுக் கொண்டு இருப்பினம். பேசாமல் இங்கும் கஷ்டம் என்று கடிதம் போடவேண்டியதுதான் என்று நினைத்த விமலா கடிதம் எழுத ஆயத்தமானாள். கடிதம் எழுத ஆயத்தமான பின்தான் டாக்டரிடம் போகவேண்டும் என்று ஞாபகம் வரவே அதற்கிடையில் வீட்டு வேலைகள் கொஞ்சம் முடித்துக் குளித்தால் நல்லது என்று நினைத்து எல்லா வேலைகளையும் விரைவில் செய்துமுடித்தாள். கணவன் வந்ததும் டாக்டரிடம் போனார்கள். டாக்டர் அவளைப் பரிசோதித்து விட்டுச் சொன்ன செய்தி அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. கணவன் ரவிக்கும் அதிர்ச்சிதான்.

அவளுக்கு வயிற்றில் கான்சர் வந்திருப்பதாக டாக்டர் சந்தேகப்படு வதாகச் சொன்னார். எதற்கும் இன்னும் பல பரிசோதனைகள் செய்து பார்க்க வேண்டும் என்றும் சொன்னார். டாக்டரிடம் இருந்து வீட்டிற்கு வரும்போது விமலா, பல்வித யோசனையில் கணவனிடம் கூட ஒன்றும் பேசாது மௌனமா கவே வந்தாள். வீட்டிற்கு வந்ததும் தலையிடி என்று சொல்லிவிட்டுப் படுத்து விட்டாள். படுத்த விமலாவிற்கு நித்திரை வரவில்லை. "கான்சர் வருத்தம் வந்தால் விரைவில் இறந்துவிடுவோமே! இவ்வளவு விரைவில் மரணம் வரவேண்டுமா? ஐயோ கடவுளே! நான் என்ன பாவம் செய்தேன்! எனக்கு ஏன் இந்தத் தண்டனை?" மனம் விட்டுப் புலம்பினாள்.

தனது கடந்தகால வாழ்க்கையில், தான் செய்த நன்மை தீமைகள் அந்த நேரம் அவளது ஞாபகத்திற்கு வந்தன. ஒரு பணக்காரத் தம்பதிக ளுக்கு மகளாகப் பிறந்து, பணம், அழகு இருக்கின்ற கர்வத்தில் எத்தனை திமிராக, மற்றவரை மதிக்காமல் நடந்தேன். கலவரத்தில் எல்லாம் இழந்து ஏழையானபின்னும் எனது கர்வம் குறைந்ததா? இல்லையே! வெளிநாட்டில் இருந்து வந்த ரவி எனது அழகைக்கண்டு விரும்பி மணந்தபடியால் இங்கு வந்து எவ்வளவு வசதியாக இருக்கிறேன். எத்தனை உறவினர்கள் எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் உதவி செய்யக்கேட்டும் அவர்களுக்கு ஒரு உதவியும் இதுவரை செய்ததில்லையே! எனக்கும் பிள்ளைகளுக்கும், எத்தனை விதம் விதமான நகைகள், உடுப்புகள் என்று வாங்கி வாங்கிச் சேர்த்தேன். இங்கு நடக்கும் ஒவ்வொரு கல்யாணத்திற்கும் புதுபுதுச் சாறி வாங்கிக்கட்டினேனே! இது மாத்திரமா! எத்தனை ஆடம்பரச் செலவுகள் செய்து பணத்தை விரயமாக்கியிருக்கின்றேன்.

இனி என் வாழ்வு முடிந்தால் இதை எல்லாம் கொண்டா செல்லப் போகின்றேன். நான் செலவழித்ததில் ஒரு சிறு தொகைப் பணத்தையாவது யாருக்கும் அனுப்பியிருந்தால் புண்ணியமாய் இருந்திருக்கும். கடைசிக் காலத்தில் ஞானம் பிறக்கும் என்று இதைத்தான் முனிவர்களும் ஞானிகளும் சொல்லியிருக்கிறார்களா? இப்படிப் பலவாறு சிந்தித்து, அழுத விமலா ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு கட்டிலைவிட்டு எழுந்தாள். இலங்கையில் இருந்து வந்த சரோவின் கடிதத்திற்குப் பதில் எழுதும் போது விரைவில் பணம் அனுப்புவதாக எழுதினாள். கடிதத்தை எழுதி முடித்ததும் மனதிற்கு ஒரு ஆறுதல் கிடைத்தது. இப்படி மனதிற்கு ஆறுதலான விசயங் கள் எத்தனையோ இருக்க வீண் ஆடம்பரங்களில் காலத்தைக் கடத்திவிட் டேனே என்று வருந்தியவளாகச் சாமியறைக்குச் சென்று இறைவனிடம் தனது தவறுகளை மன்னிக்கும்படி வேண்டி அழுதாள்.

நாட்கள் வேகமாக நகர்ந்துகொண்டிருந்தது. டாக்டரிடம் சென்று வந்தபின் ஒரு கிழமையும் சென்றது. அன்று டாக்டரிடம் இருந்து அவர்க ளுக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் அவளது இரத்தம், மற்றும் சோதனைகளின் முடிவுகள் அன்று வந்ததாகவும் அதன்படி அவளுக்கு கான்சர் நோய் இல்லை என்று முடிவு வந்துள்ளதாகவும் கூறினார்.

அதைக் கேட்ட விமலாவின் சந்தோசத்தைப் பற்றிச் சொல்லவும் தேவையில்லை. அப்பாடி! என்று பெருமூச்சு விட்ட விமலா இனி வழமைபோல் நிம்மதியாக எல்லாவற்றையும் அனுபவிக்கலாம் என்று எண்ணினாள். மற்றவர்களுக்குப் பணம் அனுப்பி உதவி செய்யவேண்டுமா? தனக்கு மிஞ்சித்தானே தானமும் தருமமும்? இப்படி எண்ணமிட்டது அவளது மனம்.

மனமே! நீ ஒரு .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் தலைவிதியா?

இருபத்தேழு வயது இளைஞன் மதன். பெயருக்கேற்ற அழகன். 10 வருடங்களுக்கு முதல் நோர்வேக்குப் படிக்கவந்தவன். என்ஜினியராகப் படித்து முடித்துவிட்டுத் தற்போது ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கி றான். அவனுக்குச் சகோதரி ஒருத்திதான். அவளும் திருமணம் முடித்து நோர்வேயில் வசிக்கிறாள். மதனின் தாய்,தந்தையர் இலங்கையில். அவர்கள் மதனுக்குத் திருமணம்பேசி, அவ்விபரங்களுடன், திருமணப்பெண்ணின் படத் தையும் மதனுக்கு அனுப்பிவைத்தனர். மதனும் பெண்ணின் படத்தைப் பார்த்துவிட்டுச் சம்மதம் தெரிவித்துக் கடிதம் அனுப்பினான். அப்பெண்தான் தன் மனைவி என்ற எண்ணத்துடன் அவளுடன் குடும்பம் நடத்துவது பற்றிய கற்பனையில் காலம் கடத்தினான்.

இப்படி இருக்கும் பொழுது ஒரு நாள், அத்திருமணப் பேச்சுக்கள் சில பிரச்சினைகள் காரணமாக முறிந்துவிட்டதாகவும், அதனால் அந்தக் கல்யாணப் பேச்சை மறந்து அப்பெண்ணின் படத்தைத் திருப்பி அனுப்பும்படி கேட்டு அவனது தாய், தந்தையர் அவனுக்குக் கடிதம் எழுதியிருந்தனர். என்ன பிரச்சினை என்ற விபரம் தெளிவாகக் கடிதத்தில் அவர்கள் எழுதவில்லை. மதனும் அப்பெண்ணின் படத்தைத் திருப்பி அனுப்பிவிட்டு, இனிமேல் இரண்டு வருடங்களுக்குத் தனக்குத் திருமணப் பேச்சு ஒன்றுமே பேசவேண்டாம். என் மனம் ஆறுதல் அடையச் சில வருடங்கள் எடுக்கும் என்று அவர்களுக்குப் பதிலும் எழுதினான்.

வேலை, சகோதரி வீடு, நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக இருப்பது, இப்படி இரண்டு வருடங்கள் எப்படிப் போனது என்றே மதனுக்குத் தெரியவில்லை. மதனுக்கு நோர்வே நாட்டுப் பிரஜாஉரிமையும் கிடைத்தது. நாட்டு நிலைமைகள் ஓரளவு நன்றாக இருப்பதை அறிந்த மதன் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று தாய் தந்தையரைப் பார்த்து வர விரும்பி இலங்கைக்கு ஒரு மாத லீவில் சென்றான்.

யாழ்ப்பாணத்திற்கும் பிரச்சினையின்றிச் சென்றான். அங்கு அந்த நாட்களில் நல்லூர்த் திருவிழா சிறப்பாக நடைபெறுவதை அறிந்து ஒரு நாள் கோயிலுக்குச் சென்றான். மதன் அங்கு அந்தப் பெண்ணைக் கண்டான். அவள்தான் முன்பு அவனுக்குத் திருமணம் பேசப்பட்டவள். படத்தில் பார்த்துப் பார்த்து அவளது முகம் அவனது நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டிருந்தது. அவளுடன் கதைப்பதற்காக அருகில் சென்றான்.

"ரமா!" அதுதான் அவளது பெயர். "என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நான்தான் மதன். நோர்வேயில் இருக்கிறவன். இரண்டு வருடங் களுக்கு முன் உங்களை எனக்குக் கல்யாணம் பேசினார்கள். இப்பொழுது உங்களுக்கு ஞாபகம் வரும் என்று நினைக்கிறேன்" என்றான் மதன்.

"ஓ! உங்களது படத்தைப் பார்த்ததால் நன்றாக ஞாபகம் இருக்கிறது" சொன்னாள் ரமா. "உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா? எத்தனை குழந் தைகள்?" மதனின் இக்கேள்வியைக் கேட்டதும் ரமா அழத் தொடங்கினாள். "கோயிலில் எத்தனை பேர் பார்ப்பார்கள். ஏன் இப்படி அழுகின்றீர்கள்? நான் என்ன தவறாகக் கேட்டுவிட்டேன். உங்களுக்கு அப்படி என்ன கவலை? எனக்குச் சொல்லலாம் என்றால் சொல்லுங்கள்". மதன் இப்படிக் கெஞ்சிக் கேட்கவும் ரமாவால் பதில் கூறாமல் இருக்கமுடியவில்லை.

"உங்களுடன் திருமணப் பேச்சுக்கள் முறிந்த சில மாதங்களின்பின் என் பெற்றோர் கனடாவிலிருந்து ஒரு மாத லீவில் வந்த ஒருவருக்கு அவசரம் அவசரமாக என்னைத் திருமணம் முடித்துவைத்தனர். ஒரு மாதம் முழுமை யாகக் குடும்பம் நடத்தவில்லை. அவர் கனடாவிற்குப் போய் என்னைக் கூப்பிடுவதற்கு எல்லா ஒழுங்குகளும் செய்வதாகச் சொல்லிவிட்டுப் போனார். போனவர் போனவர்தான். பல மாதங்களாகத் தகவல் ஒன்றும் இல்லை. எனக்கும் வயிற்றில் ஐந்து மாதக் குழந்தை வேறு. பலர் மூலம் விசாரித்ததில் அவர் ஏற்கனவே கனடாவில் திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுடன் வாழ்கிறவராகத் தெரியவந்தது. சீதனத்திற்காகவும், தாய், தந்தையருக்குப் பயந்தும் என்னை இங்கு திருமணம் முடித்தவராம். இன்னொரு பெண்ணின் திருமண வாழ்வைக் குலைக்க விரும்பாமல், நானும் என் கணவரிடம் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்துப் பெற்று, இப்பொழுது எனது ஆறு மாதக் குழந்தையுடன் அம்மா அப்பாவுடன் தனியாக வாழ்கிறேன். எல்லாம் என்னுடைய தலைவிதி. யாரை நொந்து என்ன பயன்? கோயில், விரதம் என்று இப்பொழுது காலத்தைக் கழிக்கின்றேன்." இவ்வளவையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தவள் என் பதிலுக்குக் கூடக் காத்திராமல் "குழந்தை அழும். நான் வீட்டிற்குப் போக வேண்டும். வருகின்றேன்." என்று சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாகக் கோயிலை விட்டுச் சென்றாள்.

அவளது கதையைக் கேட்ட மதனுக்கு வீட்டிற்கு வந்தபின்னும் மனச் சஞ்சலம் தீரவில்லை. என்னால் தானே ரமாவிற்கு இந்த நிலை ஏற்பட்டது. நான் அவளைத் திருமணம் முடித்திருந்தால் இப்படி இளம் வயதில் அவள் வாழ்வைத் தொலைத்திருக்கமாட்டாளே! அவளுக்கு எப்படியும் வாழ்வு கொடுத்தேயாகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். ரமாவின் வீடு தேடிச் சென்று தனது முடிவைத் தெரிவித்தான். முதலில் மறுத்த ரமாவும் இறுதியில் இதற்குச் சம்மதித்தாள். இதற்கு மறுப்புத் தெரிவித்த தனது தாய், தந்தையரைப் பலவாறு வாதாடிச் சம்மதிக்க வைத்தபின், கோயில் ஒன்றில் எளிமையாக ரமாவைத் திருமணம் செய்துகொண்டான்.

ரமாவையும் குழந்தையையும் விரைவில் நோர்வேக்குக் கூப்பிடுவ தாகச் சொல்லிவிட்டு லீவு முடிந்ததால், திரும்பவும் நோர்வேக்கு வந்தான். அவர்களை நோர்வேக்குக் கூப்பிடுவதற்காக எல்லா ஒழுங்குகளையும் செய்துகொண்டிருக்கின்றான். கனடாவில் இருந்து வந்த மாப்பிள்ளை போல், தன்னையும் ரமா நினைத்துவிடக் கூடாது என்பதே அவனது எண்ணம்.

மதனுக்கும் இதுதான் தலைவிதியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தவன்

பேர்கனுக்குப் போகும் விரைவுக் கப்பல் ஒரு வினாடிகூடத் தாமதிக்காது சரியாக 7.15 க்கு வந்து மோலோயில் நின்றது. ஒரு வழியாக அதில் ஏறி வசதியான இடமாகப் பார்த்து இருக்கின்றேன். வெயில் காலமானதால் இங்கு அடிக்கடி வீசும் புயற்காற்றும் இல்லை. அதனால் "அப்பாடி! கப்பலில் ஆட்டம் இருக்காது" என எண்ணிக்கொண்டு போட்டிருந்த ஜக்கற்றினைக் கழட்டி வைத்துவிட்டுக் கதிரையில் சாய்கிறேன். கண்ணாடியின் மூலம் வெளி அழகை ரசித்துக்கொண்டு நாலரை மணித்தியாலத்தையும் நன்றாகப் பொழுது போக்கலாம். அது போரடித்தால் வீடியோவில் படம் பார்க்கலாம் என்ற யோசனையுடன் தெரிந்தவர்கள் தலை ஏதும் தெரிகின்றதா என சுற்றுமுற்றும் பார்க்கிறேன். அப்படி ஒருவரும் இல்லை. இந்த முறை எமது சங்கப் புத்தகத்துக்குக் கதை ஒன்று எழுதவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தேன். இதற்கு இந்தப் பயணத்தில் கிடைக்கும் தனிமையில் எப்படி யாவது நல்ல கதை ஒன்றை யோசித்து எழுதவேண்டும் என்ற தீர்மானத்துடன் கையுடன் கொண்டுவந்திருந்த பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு கற்பனை உலகில் ஆழ்கின்றேன்.

"ஷ் ஷ் ஹாய்!" என்ற சத்தம் எனது கற்பனைகளைக் குலைக்கத் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தேன். கற்பனையில் மூழ்குவதாக எண்ணிக் கண்ணை மூடியபடி அப்படியே நித்திரையாகிவிட்டேன். நித்திரையில் நான் விட்ட குறட்டைச் சத்தம் தாங்காமல், பக்கத்தில் இருந்தவர்தான் அப்படிச் சத்தம் போட்டு என்னை எழுப்பியிருக்கிறார். அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு எழும்பி கப்பலுக்குள் சிறிது தூரம் நடந்துதிரிந்தேன்.

அடுத்த இடமாக புளூமோவில் கப்பல் நிறுத்தப்படும் என்ற அறிவித்தலைக் கேட்டு, "அட! ஒரு மணித்தியாலம் போய்விட்டதே." சலித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு விரைந்து எனது இருக்கைக்குச் சென்றேன். "இனியாவது நித்திரை யின்றிக் கதையை எழுதுவோம்." மனதிற்குள் சொல்லிக்கொண்டு எழுத ஆயத்தப்படுத்தினேன். கப்பல் புளுறோவில் இருந்து புறப்பட்டு சில வினாடிகள் இருக்காது. தோளில் ஒரு கை படவே திரும்பிப்பார்த்தேன்.

என் திகைப்புக்கு அளவில்லை. என்னுடன் படித்த பழைய நண்பன் ரமணன்தான் அது.

"என்ன ரமணன்! உம்மைக்கண்டு எவ்வளவு காலம்? எப்படி இருக் கிறீர்? நீர் நோர்வேக்கு எப்ப வந்தீர்?" நான் கேள்விகளை அடுக்குகிறேன்.

"பொறு! பொறு! எல்லாம் ஆறுதலாகச் சொல்லுகிறேன்" என்றவன் எனக்குப் பக்கத்தில் வந்து அமருகிறான். "நோர்வேக்கு வந்து ஐந்து வருட மாச்சு. நோர்வேயின் வடபகுதியில் அந்தக் குளிரில் இருந்துவிட்டு, இந்த ஊருக்கு வந்து ஒரு ஐந்து மாதம் இருக்கும்" எனப் பதிலளித்தவன் என்னைப் பற்றிய விபரங்களையும் கேட்டான்.

"எனக்குக் கல்யாணமாகி நாலு வருடங்கள் முடிந்துவிட்டது. பேர்க னில் இருக்கும் சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்கப்போகின்றேன். எனக்கு நாலு மாதக்குழந்தையாக ஒரு மகன் இருக்கிறான். அதனால் அவர்களைக் கூட்டிப் போகவில்லை" என்ற எனது பதிலைக் கேட்டுப் புன்னகைத்தவனின் முகத்தில் ஏதோ இனம் புரியாத சோகம் இழையோடுவதைக் கண்டேன்.

"என்னைப்பற்றி விடு ரமணன். உன்பாடு எப்படி? மனைவி, பிள்ளைகள், அம்மா, அப்பா, சகோதரங்கள் எல்லோரும் எப்படி? சுகமாக இருக்கிறார்கள் தானே?" என் கேள்வியைக் கேட்டு அவனது கண்கள் கலங்கத் தொடங்கி விட்டன.

"என்ன ரமணா நடந்தது? ஏன் கண் கலங்குகிறாய்? உனக்குச் சொல்லமுடியும் என்றால் சொல். கஷ்டம் என்றால் வேண்டாம்" என்றேன்.

அவனைப்பற்றிய பழைய நினைவுகள் என் மனதில் சில விநாடிகள் திரைப்படம்போல் ஓடுகின்றன. எட்டுப்பேர் கொண்ட பெரிய குடும்பத்தில், ஐந்தாவது பிள்ளைதான் இந்த ரமணன். கஷ்டப்பட்ட குடும்பமாக இருந்தாலும், படித்து முன்னேறவேண்டும் என்ற ஆர்வத்தில், எல்லாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுமே கவனமாகப் படித்து முன்னேறியவர்கள். பின்னர் நாட்டுப் பிரச்சினையால், சகோதரர்கள் எல்லோரும் வெளிநாடுகளுக்குப் போய்விட, அவன் மாத்திரம் தந்தை தாயைவிட்டும், தாய் மண்ணை விட்டும் வர மனமில்லாமல், அங்கேயே தங்கினவன். இப்பொழுது எப்படி மனம் மாறி இங்கு வந்தான். அதுதான் எனக்குள் ஒரே ஆச்சரியம்.

"என்ன ரவி! என்னைப்பற்றிக் கேட்டாய், பிறகு ஒரு பேச்சையும் காணவில்லை?" அவனது குரல் கேட்டுப் பழைய நினைவுகளில் இருந்து திரும்பி அவனைப் பார்க்கிறேன்.

"எனது குடும்பத்தைப் பற்றி உனக்குத் தெரியும்தானே! சகோதரர்கள் வெளிநாடு போய்விட, அம்மா, அப்பா, இரண்டு தங்கைகளுடன் வாழ்ந்தேன். நானும் வங்கி ஒன்றில் வேலை எடுத்துக்கொண்டு மட்டக்களப்பில் அமைதியாக வாழ்ந்துகொண்டிருந்தேன். வங்கியில் என்னுடன் வேலை செய்த உமாவைத்தான் மணம் முடிக்கவேண்டும் என்று தீர்மானித்தும் இருந்தேன்." அவன் கூறி முடிக்க முதல் "ஏறாவூரைச் சேர்ந்த, எங்களுடன் படித்த உமாவா? எனக்கும் நன்றாக உமாவை ஞாபகம் இருக்கிறது. நல்ல குணமான அழகான பிள்ளை" முந்திரிக்கொட்டை மாதிரி, அவனது கதையை இடை நிறுத்தி நானும் அபிப்பிராயம் சொல்லுகிறேன்.

"அதே உமாதான்! சில வருடங்களுக்குமுதல் நடந்த இனப்பிரச்சினை காரணமாக எல்லோருமே ஊரைவிட்டுப் புறப்படவேண்டிய நிலை வந்து விட்டது. நாங்கள் அங்கிருந்து படகில் இந்தியா போகப் புறப்பட்டோம். என்ன கொடுமையடாப்பா! அந்தப் படகில் அளவுக்கதிகமான ஆட்களை ஏற்றிய தால், படகு நடுக்கடலில் கவிழ்ந்துவிட்டது. அதில் எனது அன்புப் பெற்றோர், தங்கைகள் இருவர் எல்லோரையும் பலிகொடுத்துவிட்டுக் கடவுள் என்னை மாத்திரம் தப்பவைத்துவிட்டார்." இதைச் சொல்லும்போது கண்ணீர்விட்டு அழத் தொடங்கிவிட்டான் ரமணன்.

"அழாதே! ரமணன் இதுதான் விதி என்பது. உமக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை. இனி என்ன செய்வது. மனதைத் தேற்றிக் கொள்ளும். அங்கே பாரும் ரிக்கற் கேட்டு அந்த ஆள் வருகிறார். நீர் ரிக்கற் எடும். நான் இந்தக் கடையில் ஏதாவது வாங்கி வருகிறேன். சாப்பிட்டுக்கொண்டு பிறகு கதைக்கலாம்." அவனுக்குச் சொல்லிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் இருந்த கடையில் இரண்டு பணிஸ்களை வாங்கிக்கொண்டு அவனுக்கருகில் அமருகிறேன். அவனும் விட்ட கதையைத் தொடர்ந்தான்.

"இந்தியாவில் அகதிமுகாமில் இருந்து சில காலம் கஷ்டப்பட்டேன். பின்னர் வெளிநாட்டில் இருக்கும் சகோதரர்களுடன் தொடர்புகொண்டு, ஒரு வழியாக இங்கு வந்தேன். இந்த இனப்பிரச்சினையில் எல்லோரும் ஊரை விட்டு வெளிக்கிட்டபோது உமாவும் ஊரைவிட்டுப் போனதாக அறிந்தேன். நானும் உமாவைப்பற்றி அறிய எத்தனையோ முயற்சிகள் எடுத்தேன். ஆனால் என் உமா என்ன ஆனாள்? அவளுக்கு என்ன நடந்தது? என்ற விபரமே தெரியவில்லை. உமாவை விட்டு வேறு ஒரு பெண்ணை மணம் முடிக்க மனம் இல்லாமல், என் உமா எனக்கு எப்படியும் கிடைப்பாள் என்ற நம்பிக்கையில் இத்தனை நாள் காத்திருந்தேன். எனது நம்பிக்கை வீண் போகவில்லை." இதைச் சொல்லிக்கொண்டு ஒரு புதிருடன் என்னைப் பார்த்தான் ரமணன். நானும் சுவாரசியத்துடன் நிமிர்ந்து இருந்தேன்.

"மூன்று கிழமைக்கு முதல், லண்டனில் இருந்து நண்பன் ஒருவனின் கடிதம் வந்தது. அவன்தான் உமாவைப்பற்றிய விபரங்கள் எழுதியிருந்தான். உமா கல்யாணம் முடித்து லண்டனில் மூன்று வருடங்களாக வசிக்கிறதாகவும், ஒரு வருடத்திற்கு முதல் அவளது கணவன் இறந்துவிட்டதாகவும், அதனால் இரண்டு வயதுக் குழந்தையுடன், தனியாக உமா அங்கு கஷ்டப் படுவதாகவும் எழுதியிருந்தான். என் உமா நன்றாக வாழவேண்டும் என்று நான் இங்கு கடவுளை நாளும் வேண்டிக்கொண்டிருக்க, என் உமாவிற்கு இப்படி ஒரு நிலையா? இதைக் கேட்டது தொடங்கி என் மனதிற்கு ஆறுதல் இல்லாமல் இருக்கிறது. அந்தக் கடிதம் கிடைத்த நாளில் இருந்து, லண்டன் போக விசா, ரிக்கற் எல்லாம் ஆயத்தம் செய்தேன். சென்ற கிழமைதான் எல்லாம் சரிவந்தது. நாளை லண்டன் பயணமாகின்றேன். அதற்குத்தான் இப்பொழுது பேர்கன் போகின்றேன்" என்றான் ரமணன்.

"அது சரி ரமணன். நீ லண்டன் செல்வது தனிய உமாவிற்கு ஆறுதல் சொல்லவா அல்லது....." என்று இழுத்தேன்.

"ஆறுதல் கூறமாத்திரம் இல்லை. உமா சம்மதித்தால் அவளைத் திருமணம் முடித்து, அவளுக்கு ஒரு வாழ்வு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் போகின்றேன். முதலில் உமா சம்மதிக்கவேண்டும். தமிழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம், பண்பாடு என்று தயங்கினால் என்ன செய்வது என்பதுதான் எனக்கும் யோசனை. எதற்கும் அங்கு சென்று முயற்சி செய்வோம். கடவுள் என் தலையில் என்ன எழுதியிருக்கிறானோ, அதுதானே நடக்கும்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டான்.

"நீ இப்படி உமாவிற்காக இவ்வளவு காலம் காத்திருக்க, உமா உன்னை நினைக்காமல் இப்படி வேறு ஒருவரைத் திருமணம் முடித்தது சரி என்று நீ நினைக்கிறாயா?" எனது கேள்வியைக் கேட்ட அவன் "படகு கவிழ்ந்து, அதில் எனது அம்மா,அப்பா சகோதரங்களுடன் நானும் இறந்திருப் பதாக அவள் நினைத்துத் தனது பெற்றோரின் ஆறுதலுக்காகத் திருமணம் முடித்திருக்கலாம்தானே" எனக் கூறினான். "அதுவும் சரிதான். கவலைப் படாதே!" நான் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே எங்கள் கப்பலும் பேர்கன் துறைமுகத்தில் நிற்பதற்கு விரைந்தது.

பெண்ணின் அழகு, அவள் தரும் சீதனம் என்று அலைந்து திருமணம் முடிக்கும் இளைஞர்கள் உள்ள இந்தக் காலத்தில், இப்படியும் ஒருவனா? என்று நினைக்க, எனது எண்ணத்தில் அவனைப் பற்றிய மதிப்புப் பல மடங்கு உயர்ந்தது. கப்பலில் இருந்து இறங்கமுதல் அவனுக்கு எனது வாழ்த்துக்க ளைச் சொல்லிவிட்டுக் கப்பலில் இருந்து இறங்குகின்றேன். இறங்கமுதல் கதை எழுதுவதற்கு எடுத்த பேப்பரையும் மறக்காமல் கசக்கி, ரமணன் பார்க் காமல் குப்பைக் கூடையில் எறியவும் தவறவில்லை. "ம்.....நானும், எனக்கு ஒரு கதை எழுதும் ஆசையும். நல்ல வேளை! இந்த முறையும் வாசகர்கள் தப்பித்தார்கள்" என்ற எண்ணத்துடன் கப்பலைவிட்டு இறங்குகின்றேன். இன்னொருமுறை பேர்கனுக்குப் போகாமலா விடப்போகிறேன்.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை

சனி, ஞாயிறு வந்தால் போதும். தொலைபேசி அட்டைகளை வைத்துக் கொண்டு வெளிநாடுகளில் இருக்கும் உறவினர்களுடன் கதைக்கத் தொடங்கிவிடுவோம். அன்றும் இப்படித்தான் சிநேகிதி ஒருத்தியுடன் கதைத் தேன். "இங்கு வந்து காசு காசு என்று ஓடித்திரிந்து உடல் வருத்தத்தைத் தான் கண்டது மிச்சம். பேசாமல் ஊரில் போய் இருப்பம் என்று பார்க்கிறன். சமாதானம் வரும் என்று கதைக்கினம், வந்தால் எவ்வளவு நல்லது. எப்ப ஊருக்குப் போவோம் என்று இருக்கிறது" என்றாள். நானும் "ஓம் ஓம். இங்கு இந்தக் குளிருக்குள் இருந்து யார் கஷ்டப்படுகிறது? இவங்களுடைய சாப்பா டும் புதுப்புது வருத்தத்தைத்தான் தருகிறது. வெளிநாட்டு வாழ்க்கை என்றாலே வெறுப்பாக இருக்கிறது" என்றேன்.

"இனித் தொடங்கிவிட்டா! ரெலிபோனிலும் வருத்தத்தைப் பற்றிக் கதைக்காவிட்டால் உங்களுக்குப் பொழுதுபோகாதே! உங்களுக்கு வேற வேலையில்லையா?" பிள்ளைகளின் முணுமுணுப்புத் தாங்காமால் ரெலி போனை வைக்கின்றேன். என்னுடன் சற்றுமுன் கதைத்த சிநேகிதி காயத் திரியைப்பற்றி நினைத்துப் பார்க்கிறேன். தான் பெரிய வடிவு என்ற கர்வத்தில் எல்லோரையும் அலட்சியப்படுத்திக் கதைக்கும் கதையும், கர்வமும் இப்பொ ழுது எப்படி அடங்கிவிட்டன. அவளின் தந்தைக்கு இருதய நோய் வந்து வேலையையும் இழந்தவுடன் அவர்களது குடும்பம் சரியாகக் கஷ்டப்பட்டது. ஒரு பெண், ஒரு ஆண் என்று அந்தச் சிறு குடும்பத்தில், காயத்திரியின் அண்ணா தனது சுயநலமே பெரிது என்று ஒரு பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து வெளிநாட்டிற்கும் சென்றுவிட்டார். காயத்திரிதான் படிப் பதை நிறுத்திவிட்டு வேலை செய்து தாய் தந்தையரைக் காப்பாற்றிவந்தாள்.

தந்தையின் இருதயநோய்ப் பாதிப்பால் கவலைப்பட்டுக் கொண்டிருந்த தாயும், ஒரு நாள் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுப் படுத்தபடுக்கையாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். காயத்திரியின்பாடு இன்னமும் திண்டாட்டமாகிவிட்டது. வீட்டில் தாய்க்கு முழுவேலையும் செய்துவிட்டு, தந்தையைத் துணைக்குத் தாயாருடன் விட்டுவிட்டு வேலைக்குப் போய் வந்தாள்.

அழகான அவளது தோற்றத்தால் கவரப்பட்டுப் பலரும் அவளை மணம்முடிக்க விரும்பி வந்தார்கள். ஆனால் அவள், தாய் தந்தையர் இந்நிலையில் இருக்கும்போது அவர்களை விட்டுவிட்டுத் தனக்கென்று குடும்பம் அமைந்தால் கணவன், பிள்ளைகள் என்று தன் குடும்பத்தினரைப் பார்க்கவே நேரம் சரியாக இருக்கும். பெற்ற தாய், தந்தையர் இந்நிலையில் இருக்கும் போது எனக்கு இந்தக் குடும்ப வாழ்க்கை தேவையில்லை என்று சொல்லித் திருமண வாழ்க்கையே வேண்டாம் என்று வாழ்ந்தாள். இவ்வுலகில் எனக்கு இந்தப் பிறப்பைக் கொடுத்த தாய், தந்தையரைப் பார்த்து, அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதே எனது முக்கிய கடமை என்று நினைத்து அவர்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துவந்தாள்.

சில வருடங்கள் சென்றன. தந்தையும் தாயும் ஒருவர்பின் ஒருவராக மறைந்துவிட, காயத்திரியும் தனிமையில் தவிக்கத் தொடங்கினாள். அவளுக்கும் வயது 32 ஆகிவிட்டது. அவள் தாய், தந்தையருக்குச் செய்த புண்ணியமோ என்னவோ அவளையும் வெளிநாட்டில் இருந்து சென்ற ஒருவர் திருமணம் செய்து, தற்போது டென்மார்க்கில் வசித்துவருகிறாள். அவளது வாழ்க்கையில் அவள் தாய், தந்தையருக்குச் செய்த கடமைபோல் எல்லோருக்கும் செய்யக்கிடைக்குமா? இதற்கும் ஒரு புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று எனக்குள் நினைத்துக்கொள்கின்றேன். "அம்மா சமைக்க வில்லையா? நேரம் போகின்றது. என்ன யோசித்துக் கொண்டிருக்கின்றீர்கள்?" என்ற மகளின் குரல்கேட்டு, இருந்த இடத்தை விட்டு எழுந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கெட்டபின்.....

உடம்பு அலுப்பாக இருந்தாலும் வீட்டைத் தூசி தட்டிக் கழுவுவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அந்த நேரம் பார்த்துத் தொலைபேசி மணியும் அடித்தது. வேலை நேரத்தில் இது ஒரு தலையிடி என்று முணு முணுத்துக்கொண்டு போய் அதனை எடுத்தேன்.

நான் ஹலோ என்று சொல்வதற்குள் மறுமுனையில் மகள் உஷா, "அம்மா அது நான்தான், எனக்கு நாளையிலிருந்து ஒரு கிழமைக்கு லீவு விடுகிறார்கள். எனக்கு இங்கு இருக்கப் போரடிக்கிறது. எப்படியும் இன்று இரவு உவ்விடம் வந்துவிடுவேன். முதலில் இங்கிருந்து படிப்பம் என்று நினைத்துத்தான் லீவு விடுவதைப்பற்றியே உங்களுக்கு முதலில் சொல்ல வில்லை. இப்பொழுது உவ்விடம் வரத் தீர்மானித்தபடியால் சொல்லுகின் றேன். எனக்குப் பிடித்த இடியப்பமும் கறியும் செய்து வையுங்கள். பிரவீனுக் கும் லீவுதானே! எப்பொழுது வீட்டுக்கு வருகிறார்னாம்?" என்று உஷா கேட்க, "அவன் நாளைக்குத்தான் வருகிறானாம்" என்றேன். "எல்லோரையும் பார்க்க ஆசையாக இருக்கிறது. வேறு கதைக்க நேரம் இல்லை. நேரில் எல்லாம் கதைப்போம்." சொல்லிவிட்டுப் போனை வைத்தாள் உஷா.

22 வயது மகள் உஷா பேர்கனிலும் 20 வயது மகன் பிரவீன் துரொம்சோவிலும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஏதாவது பாட சாலை லீவு விடும் நாட்களில்தான் இங்கு வருவார்கள். அவர்கள் வரப் போகிறார்கள் என்ற சந்தோசத்தில் வீடு கழுவும் வேலைகூட அலுப்பாக இருக்கவில்லை. இரண்டு பிள்ளைகளைப் பெற்றும், இப்பொழுது ஒரு பிள்ளைகூட அருகில் இல்லாமல் இருந்து எவ்வளவு சலிப்பான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற வேதனையில் கண்கள் நனையத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைக் கழுவி முடித்த களைப்பில் கொஞ்சநேரம் ஆறுதலுக்குக் கதிரையில் இருந்தேன். உடம்பு ஓய்வு அடைந்தாலும் மனதிற்கும் அதில் தோன்றும் எண்ணங்களுக்கும்தான் ஓய்வு ஏது? பழைய நினைவுகளில் மனம் ஆழ்ந்தது. இந்த நாட்டிற்கு வந்தபொழுது உஷாவிற்கு நாலு வயது, மகன் பிரவீனுக்கு இரண்டு வயது. பிள்ளைகளின் மழலைக் குரலைக் கேட்டு, எந்த நேரமும் பாதுகாப்பும் அரவணைப்புமாக அவர்களை வளர்க்கவேண்டிய பருவம் அது. ஆனால் நாங்கள் என்ன செய்தோம்? வந்த புதிதில் படிக்கவும், பின்னர் வேலை எடுத்து உழைக்கவும் தொடங்கினோம். பிள்ளைகளைக் காலையில் பிள்ளைகள் பார்க்கும் இடத்தில் அவர்கள் கதறக்கதற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிட்டு வேலைக்குப் போனதை நினைக்க இன்னும் கவலையாக இருக்கிறது. அதுமட்டுமா? வேலையில் இருந்து வந்தவுடன் வீட்டு வேலைகள், பின் ரீ.வி. அல்லது டெக்கில் படம் பார்ப்பதில் பொழுதைச் செலவிடுவோம். அவர்களுடன் ஆறுதலாகக் கதைத்து அவர்களையும் மனிதர்களாக மதித்துக் கதைத்திருக்கின்றோமா?

என்னைவிட இவர் இன்னும் மோசம். சகோதரங்களுக்குக் காசு அனுப்பவேண்டும், வீடு வாங்கிய கடன் கொடுக்கவேண்டும், ஒரு நாளைக்கு இரண்டு மூன்று வேலை அல்லது மேலதிக வேலை என்று நேரம் காலம் இல்லாமல் வேலை செய்தார். இவர் பிள்ளைகளுடன் கழித்த நேரம் இன்னும் குறைவு. எவ்வளவு சந்தோசத்தை இழந்துவிட்டார். இப்பொழுது தனிமையில் நாங்கள் இருக்கும்போது அடிக்கடி இதைச் சொல்லிக் கவலைப்படுவார். "காசு தேவைதானப்பா. ஆனால் காசு காசு என்று அலைந்ததில் என்னுடைய பிள்ளைகளின் தொடர்பை எவ்வளவு இழந்துவிட்டேன். இப்பொழுது தேவைக்குமேல் காசு இருந்தும், உண்மையான சந்தோசம் வாழ்க்கையில் இல்லை. பிள்ளைகள் அருகிலில்லாமல், காசை மாத்திரம் வைத்துக்கொண்டு இது என்ன வாழ்க்கையப்பா" என்பார். "நீங்கள் இந்தக் குளிருக்குள் ஓடியோடி வேலை செய்து காசை மாத்திரமா சம்பாதித்தீர்கள்? வருத்தத்தையும் அல்லவா தேடியிருக்கிறீர்கள். இப்பொழுது பாருங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்" என்பேன்.

பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானபின் படிக்கவும் பின் வேலை, திருமணம் என்று முடித்தபின் எங்களுடன் இருக்கவாபோகிறார்கள்? அவர்கள் எங்களுடன் இருக்கும் சிறிது காலத்தில்கூட அவர்களுடன் இருக்காமல், அவர்கள் அருகாமையை இழந்துவிட்டோம். இனி என்ன செய்வது? நடந்து முடிந்த காலம் இனிமேல் திரும்பி வரப்போவதில்லை" என்று அடிக்கடி கூறிப் பெருமூச்சுவிடுவார்.

நானும் எவ்வளவு தவறுகள் செய்திருக்கின்றேன். மற்றவர்கள் போடும் நகைகள், உடைகளைப் பார்த்துவிட்டு நான் அவர்களைவிடத் திறமானதாக எல்லாம் போடவேண்டும் என்று நினைத்து, அவைகளை வாங்குவதற்காகக் கூடுதல் வேலை செய்திருக்கிறேன். இதனால் பிள்ளைகளுடன் இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தைக் குறைத்திருக்கிறேன். அவர்களுக்கு நல்ல சாப்பாடுகள் கூடச் செய்து கொடுக்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை. ஏன்தான் இப்படி மற்றவர் களைப் பார்த்துப் பொறாமைப்படும் குணம் எனக்கு வந்ததோ?

நாங்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள். ஊரில் அப்பா மாத்திரம் வேலைக்குப் போய்வர, அம்மா வீட்டில் இருந்து எங்களை எவ்வளவு அன்பாக, பாதுகாப்பாக வளர்த்தார். எங்கள் அப்பா இப்படி இரண்டு, மூன்று வேலை என்று செய்யவில்லை.

எங்களுக்குச் சிறுவயதிலேயே இராமாயணம், மகாபாரதம் என்று, நல்ல நல்ல அறிவுரைக் கதைகளையெல்லாம் அம்மா, அப்பா சொல்லித் தந்தார்கள். நானும் இவரும் பிள்ளைகளுக்குச் சிறு கதைகள் கூடச் சொல் லிக் கொடுக்கவில்லை. எங்களுக்கு நேரம் இருந்தால்தானே இதையெல்லாம் சொல்லிக்கொடுத்திருக்க முடியும்.

இவர் வேலையால் வந்தவுடன் ஊருக்குக் காசு அனுப்பும் பிரச்சி னையால் அடிக்கடி சண்டைதான் பிடித்துள்ளேனே தவிர, அந்த நேரத்தில் ஒரு சிறு கதையாவது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை.

இப்படி எத்தனையெத்தனை தவறுகள் செய்திருக்கின்றேன். இதனை, இந்த 50 வயதில் வீட்டில் தனிமையில், நானும் இவரும் இருக்கும்போதுதான் உணருகின்றேன். இதைத்தான் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்று சொல்வார்களாக்கும். எங்கள் வாழ்க்கையைப் பார்த்தாவது மற்றவர்கள் திருந்தி, பிள்ளைகளுடன் இருக்கும் சந்தோசத்தைத் தவறவிடாமல் இருந் தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இதை அப்படியே ஒரு புத்தகத்திற்கு எழுதினால் என்ன என்று எனக்குள்ளே யோசித்தபடி, மனம் பலவித நினைப் புகளில் இருக்க அப்படியே கதிரையில் கண்ணயர்ந்துவிட்டேன். "என்னப்பா! கதிரையில் நல்ல சயனம்!!" என்றபடி வெளியே சென்றிருந்த கணவர் வந்து என்னை எழுப்ப, திடுக்கிட்டு விழிக்கின்றேன்.

"உஷாவும் இன்று வருகிறாளாம். இப்ப கொஞ்சம் முதல்தான் போன் செய்தாள்." சொல்லிவிட்டு, அவர் முகம் சந்தோசத்தில் பூரிப்பதைப் பார்த்தபடியே சமையல் வேலையினைத் தொடங்குவதற்காகக் குசினிக்குப் போகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்வு

"எங்கேயப்பா இந்த ரெலிபோன் பில்லை வைத்தனீர்?" கணவன் ராமின் கத்தலைக்கேட்டு, சமையலுக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்த சுகுணா எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவந்தாள்.

"ஏன் அப்பா இந்தக் கத்துக் கத்துறியள்! எங்க போகப்போகிறது அது? இங்குதான் எங்கேயாவது இருக்கும் தேடிப்பாருங்கள்." இது சுகுணாவின் பதில் கத்தல். "ஊரில் வேலியால் எட்டிப் பக்கத்து வீட்டுக்காரருடன் கத்திக் கத்திக் கதைத்த பழக்கம். இங்கு நோர்வேக்கு வந்தபின்னும் இந்தக் கத்தல் போகவில்லை" முணுமுணுக்கிறாள் சுகுணா.

"என்னப்பா முணுமுணுக்கிறீர் எனக்கும் சொல்லுமன்" என்றதுடன் "இந்த வீட்டில் ஒரு சாமான் வைத்த இடத்தில் இருக்கமாட்டுது. எல்லாத் துக்கும் கால் அடிக்கடி முளைத்துவிடும்." பதிலுக்குக் கணவன் ராமும் முணு முணுத்தான். "இங்கிருக்கப்பா ரெலிபோன் பில். உங்களுக்கு எல்லாச் சாமான்களும் கண்ணுக்கு முன்னால் இருக்கவேண்டும். இந்தாங்கோ பிடி யுங்கோ இதை. எனக்கு வேலை இருக்கிறது. நான் போகவேண்டும்." சொல் லியபடி தேடி எடுத்த பில்லைக் கொடுத்தாள் சுகுணா.

"வர வர ரெலிபோன் பில்லும் கூடிக்கொண்டு போகிறது. இனிமேல் இதற்கென்று பிறிம்பாக உழைக்கவேண்டுமப்பா" கூறிப் பெருமூச்சுவிட்டான் ராம். "ஓ! ஓ! அம்மா, சகோதரங்கள் கொழும்புக்கு வந்து நிற்கினம். ஒருக்கா கதைக்கட்டாம் என்றவுடன் விழுந்தடித்து ரெலிபோன் எடுப்பியள். பத்தாத தற்கு ஊர்க்கதை எல்லாம் ரெலிபோனில் கதைத்தால் பில் ஏறாமலா இருக் கும்" சுகுணாவின் எரிச்சல் கத்தலைக்கேட்ட ராம், "ஏனப்பா சவுண்டைக் கூட்டுகிறாய்? உமக்கு எங்களுடைய ஆட்கள் என்றால் எந்த நேரமும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பம் என்றது தெரிந்த விசயம்தானே. எனக்கு உம்முடன் கதைக்க நேரம் இல்லை. நான் இந்த பில்லைக் கட்டிவிட்டு, கடைக்குப் போய்வாறன். சாமான் லிஸ்ரைத் தாரும். பிறகு கடைக்குப்போகக் காருக்குள் ஏறமுதல் ஜன்னலால் எட்டி ஒவ்வொரு சாமானாகச் சொல்லுவீர். சாமான் வாங்கி வீட்டை வந்தபின் இதைச் சொல்ல மறந்துவிட்டனப்பா, அதைச் சொல்ல மறந்துவிட்டனப்பா என்று சொல்லுவீர்" என்ற ராம் சாமான் லிஸ்டைக் கையில் எடுத்துக்கொண்டு காருக்குப் போனான்.

"இவருக்கு எந்த நேரமும் ஏதாவது சொல்லி, என்னுடன் கொளுவா விட்டால் சரிப்பட்டுவராது" சுகுணாவும் தனக்குள் சொல்லிக்கொண்டு சமைக்கக் குசினிக்குப் போனாள். அந்த நேரம் மகள் மீரா அங்கு வந்து "அம்மா சிறீலங்காக் கடிதம் வந்திருக்கம்மா." சொல்லிக்கொண்டு கடிதத் தைக் கொடுத்தாள். சிறீலங்காக் கடிதம் என்றவுடன் சமையல் எல்லாவற் றையும் அப்படியே விட்டுவிட்டு ஆறுதலாக இருந்து கடிதத்தை உடைத்தாள் சுகுணா. அவளின் மாமாதான் கடிதம் எழுதி இருந்தார். மாமிக்கு உடம்பு சரியான மோசமாகிக் கொண்டு வருகிறதாம். சாப்பாட்டிற்கும் மருந்துக்கும் சரியான செலவாம். அதனால் காசு அனுப்பி உதவி செய்யும்படி கேட்டு எழுதியிருந்தார்.

கடிதத்தை வாசித்ததும் சுகுணாவின் மனம் அவளின் பழைய வாழ்க்கையை அசைபோட்வைத்தது. அம்மாவின் கூடப்பிறந்த சகோதரம் தான் இந்த மாமா. பணக்காரியான இந்த மாமியைக் கல்யாணம் கட்டியதும், நாங்கள் எல்லாம் வசதி இல்லாதவர்கள் என்று, எங்களை எப்படியெல்லாம் அவமரியாதையாக இருவரும் நடத்தினார்கள். தங்களுடைய பிள்ளைக ளுக்கு விதம் விதமான சாப்பாடும், எங்களுக்கு அவற்றையெல்லாம் சாப்பிட அருகதை இல்லை என்று அவற்றைக் காட்டாமல் சாதாரணச் சாப்பாடும் தந்தவர்கள். அந்த நேரம் எங்கள் மனம் எப்படிக் கொதித்தது. இதைவிடப் படிப்பதற்கு எனக்கும் அண்ணாவுக்கும் உதவி செய்யும்படி எத்தனைதரம் அம்மா கேட்டிருப்பா."உங்களுக்கு என்னத்திற்குப் படிப்பு? கடையில் வேலை செய்து உழைக்கலாம் அல்லது இயக்கத்திற்குப் போய் நாட்டுக்குச் சேவை செய்யலாமே" என்றெல்லாம் கூறி எவ்வளவுதூரம் எங்களை மனம் வருத்தி யிருப்பார்கள். எங்களுக்கு மாத்திரம் என்று இல்லை. வேறு ஒரு நல்ல காரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்திற்கோ ஏழைகளுக்கோ ஒரு பொழுதும் அவர்கள் உதவியது கிடை யாது. தனக்கு மிஞ்சித்தான் தானமும் தருமமும், தங்களுக்குப் போதும் என்ற நிலை வரவில்லையே என்று எண்ணி இந்த மாமாவும் மாமியும், ஒருவருக்கும் ஒன்றும் கொடுத்ததுகிடையாது.

அப்படி இருந்த மாமா, மாமி, பிள்ளைகளையும் சொத்துச் சுகங்களை யும் கலவரங்களில் பறிகொடுத்து எப்படி ஏழையாகிவிட்டார்கள். இந்த நிலையில் எப்படி இருந்த நாங்கள், இப்பொழுது எப்படி வாழ்கிறோம். இதற் கெல்லாம் காரணம் என்ன? எவ்வளவுதான் கஷ்டம் இருந்தாலும் தங்களால் முடிந்தளவு சரீரத்தாலும், மற்றும் பல வழிகளிலும் மற்றவர்களுக்கு அப்பா, அம்மா உதவினார்கள். "அறஞ்செய விரும்பு" என்ற ஔவையாரின் நல்வாக்குப்படி தான தருமம் செய்து எங்கள் அம்மா,அப்பா வாழ்ந்தபடியால், இன்று கடவுள் எங்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்துள்ளார் என நினைத்தாள் சுகுணா. மாமா மாமி செய்த வினை அவர்களை வருத்தட்டும், நாங்களும் அறம் செய்து வாழ்ந்தால்தான் நாளை எங்கள் பிள்ளைகள் நன்றாக இருப்பார்கள். அதனால் எப்படியும் மாமாவுக்குக் காசு அனுப்ப வேண்டும் என்று தீர்மானம் செய்தவளாகச் சமையலைத் தொடரக் குசினிக் குப் போனாள் சுகுணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்துப் பச்சை

தோளில் கை ஒன்று பட்டதும் திடுக்கிட்டவளாகத் திரும்பிப் பார்க்கி றேன். "ஹாய் ராஜி! எப்படி இருக்கிறாய்? உன்னைக் கண்டு கனகாலம் ஆகிறது. நோர்வே வாழ்க்கை எப்படி? பிடித்துள்ளதா? சந்தோசமாக இருக்கி றாயா?" இப்படி மூச்சுவிடாமல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள் எனது பழைய கல்லூரிச் சிநேகிதி கஸ்தூரி.

எனது கல்லூரிச் சிநேகிதி கஸ்தூரியைப் பத்து வருடங்கள் இடை வெளிக்குப் பிறகு அதுவும் நோர்வேயின், ஒஸ்லோ ரயில் நிலையத்தில் அவளைத் திரும்பவும் சந்திப்பேன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அவளைக் கண்ட ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் எனக்குப் பேசவே வார்த்தை வரவில்லை.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு "வா கஸ்தூரி! அந்த சீற்றில் இருந்து கதைப்போம். கதைப்பதற்கு நிறைய இருக்கிறது" என்று சொல்லி அவளை யும் அழைத்துக்கொண்டு அங்கு சென்றேன். "ஏன் ராஜி, உன் முகத்தைப் பார்த்தால் என்னவோ சரியான கவலையில் இருப்பவள் போல இருக்கிறாயே! உனக்கு என்ன நடந்தது? முன்பு எந்த நேரமும் சிரித்தபடி ஏதாவது சினிமாப் பாட்டுக்களை முணுமுணுத்தபடி இருப்பாயே! உன்னில் சரியான மாற்றம் இருக்கிறது. என்ன நடந்தது என்று நான் அறியாமலா?" என்று கஸ்தூரி கேட்டதுதான் தாமதம், எனக்கு அடக்க முடியாமல் அழுகை வந்துவிட்டது. "உஸ்ஸ்.... என்ன இது ராஜி! ஆட்கள் பார்க்கப்போகிறார்கள். உனக்குச் சொல்லக் கஷ்டமாக இருந்தால் சொல்லவேண்டாம். இப்போது அழுகையை நிறுத்து." கஸ்தூரி என்னை அடக்கினாள். ஒருவாறு அழுகையை அடக்கி விட்டு எனது கதையைச் சொல்லத் தொடங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரில் படிப்பு முடிந்ததும், அம்மா அப்பா சகோதரங்களின் விருப்பத்திற்கு எதிராகச் சத்தியனை மணம் முடித்து, எனது பிறந்த வீட்டுக்காரரின் உறவுகளை எல்லாம் முறித்துவிட்டு, ஒருவரின் சொந்தமும் வேண்டாம் என்று இருவரும் ஒருவாறு இங்கு நோர்வேக்கு ஏழு வருடங்க ளுக்கு முதல் வந்து சேர்ந்தோம். இங்கு வந்து ஒரு வருடம் சந்தோஷமாகப் பொழுது போனது. அதன் பிறகுதான் நான் செய்த தவறுகள் என்னைத் தண்டிக்க ஆரம்பித்தன."

"இங்கு வந்து ஒரு வருடம் முடிந்ததும் எனக்குக் குழந்தையும் கிடைத்தது. பிறந்த அந்த ஆண்குழந்தையும் இரண்டாவது பிறந்ததினம் முடிந்த சில நாட்களுக்குள் மூளைக்காய்ச்சல் வந்து இறந்துவிட்டது." இதைச் சொல்லி முடிக்கமுதல் தாங்கமுடியாமல் திரும்பவும் அழத் தொடங்கிவிட்டேன். கஸ்தூரி ஒருவாறு என்னைத் தேற்றினாள். "உனக்கும் நேரம் போகப்போகிறது. நான் எனது கவலைகளைச் சொல்லி உன்னைக் குழப்புகிறேன்" என்று நான் கஸ்தூரிக்குச் சொல்லவும், "இல்லை ராஜி, கவலைகளை உயிர்ச் சிநேகிதி எனக்குச் சொல்லி ஆறாமல் வேறு யாருக்குச் சொல்லப் போகிறாய்? தொடர்ந்து சொல்லி முடி" என்றாள் கஸ்தூரி.

"குழந்தை இறந்த கவலை எங்களை நாளும் வருத்தத் தொடங்கியது. இடம் மாறினால் நிம்மதி வரும் என்று இந்த நாட்டை விட்டுக் கனடாவிற்குப் போக முடிவுசெய்தோம். அங்கும் களவாகப் போயிறங்கப் பணம் கனக்கச் செலவழித்தோம். எங்கள் கஷ்டகாலம் அங்கு எங்களை ஏற்க மறுத்துத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்."

"சத்தியனும் இப்போ முன்பு மாதிரி இல்லை. அடிமேல் அடியாகக் கஷ்டங்கள் வந்ததும், அதைத் தாங்கமுடியாமல் குடிக்கத் தொடங்கி விட்டார். நானும் எவ்வளவோ முயன்றும் அவரைத் திருத்த முடியாமல் இருக் கிறது. நேற்றும் குடிபோதையில் கார் ஒன்றுடன் மோதி, இப்போது ஆஸ்பத் திரியில் இருக்கிறார். அவரைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போகத்தான் இப்போ ரயிலுக்குக் காவல் இருக்கிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கதையைக் கேட்ட கஸ்தூரி "அடப் பாவமே! இப்படி ஒரு கஷ்டமா!" என்று பெருமூச்சுவிட்டாள். "ஏன் ராஜி, உனக்கு வேறு ஒரு குழந்தையும் இனிமேல் கிடைக்காமல் விடவா போகிறது? இப்படிக் கவலைப் படுகிறாயே!" என்று கேட்டாள். "எனக்கு இனி ஒரு குழந்தை கிடைப்பதற்குச் சந்தர்ப்பமே இல்லை" என்று டாக்டரும் கூறிவிட்டார். தாய் தந்தையரின் மனம் நோக அவர்களை மதிக்காமல், பணம் இருக்கிறது என்று பணத் திமிரில் வாய்க்கு வந்தபடி கதைத்துத் திரிந்தேன். அதற்கான பலனைத்தான் நான் இப்போது அநுபவிக்கிறேன். என் மனதில் மற்றவர்கள் மீதிருந்த பொறாமைத்தீ என்னையே இப்போது சுட்டுவிட்டது. எனக்கு இனி எங்கு நிம்மதியான வாழ்வு கிடைக்கப்போகிறது? சத்தியனையும் கூட்டிக்கொண்டு திரும்பவும் இலங்கைக்குச் சென்று, அங்கு தாய் தந்தையருக்குக் கடைசிக்காலத்தில் சேவை செய்து, அநாதைப்பிள்ளை ஒன்றையும் தத்து எடுத்து வளர்க்கவும் திட்டம் போட்டுள்ளேன். தாய் தந்தையரை மதிக்காமல் அவர்களை மறப்பவர்களுக்கு எனது வாழ்க்கை ஒரு படிப்பினையாக இருக்கட்டும்." நான் இதைச் சொல்லி முடிக்கவும், நான் எடுக்கவேண்டிய ரயில் அங்கு வரவும் சரியாக இருந்தது. கஸ்தூரியிடம் எனது வீட்டு விலாசத்தைக் கொடுத்து, நேரம் இருந்தால் வீட்டுப்பக்கம் வரும்படி கூறிவிட்டு ரயிலைப் பிடிக்க ஓடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிக்கடன்

இன்னும் சிறிது நேரத்தில் விமானம் தரையிறங்க இருப்பதால் எல்லோரையும் அவரவர் ஆசனங்களில் பாதுகாப்பாக அமரும்படி அறிவித்தல் வந்ததும் அதன்படி ரகுவும் பாதுகாப்பாக ஆசனத்தில் அமர்ந்தான். தாய் நாட்டையும் உறவினர்களையும், பத்து வருடங்களுக்குப் பிறகு பார்க்கப் போகும் பரபரப்பிலும் சந்தோசத்திலும் அவனது மனம் துடித்துக் கொண்டிருந்தது.

இதே விமான நிலையத்தில் பத்து வருடங்களுக்கு முன்,அகதியாகப் போகும் நாட்டிற்குப் பிரச்சினையின்றிப் போய்ச்சேரவேண்டும் என்று கடவுளை வேண்டியபடி தன்னந்தனியே, பயந்து பயந்து விமானம் ஏறியதை ரகு நினைத்துப் பார்க்கிறான்.

எப்படியோ கஷ்டப்பட்டு நோர்வே நாட்டிற்குப் போய், இப்பொழுது அந்த நாட்டுப் பிரஜா உரிமையும் பெற்றுவிட்டான். இனிமேல் பயமின்றி இலங்கை சென்று வரலாம் என்று அறிந்தபின், அவனும் தாய்நாடான இலங்கை சென்று வரத்துணிந்து பயணமும் புறப்பட்டுவிட்டான்.

ரகுவிற்கு இப்பொழுது வயது 27. இன்னும் திருமணமாகவில்லை. தாய் நாட்டில் ஒரு பெண்ணை மணம் முடித்துத் திரும்பவேண்டும் என்ற நோக்கமும்தான் அவனது இலங்கைப் பயணத்திற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

விமானம் தரையிறங்கியதும் அங்கு அவனை அழைக்க வந்திருந்த தாய் தந்தையருடன் வீட்டிற்குச் சென்றான். தாய் தந்தையருடன் பழைய கதைகள் பேசி மகிழ்ந்தான். உறவினர் பற்றிய விபரங்கள் எல்லாம் கேட்டு அறிந்தான். அன்று இரவு படுக்கப் போகும்போது அவனது மனம், தங்களது பழைய வாழ்க்கையை நினைத்துப் பார்க்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ் இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்து படித்த காலத்தை நினைத்துப் பார்த்தான். எவ்வளவு இனிமையான கல்லூரிக்காலம் அது. அது மட்டுமா? நல்லூர்த் திருவிழாக் காலங்களில் ஏற்படும் மகிழ்ச்சியை எவ்வளவு பணம் கொடுத்தாலும் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் அநுபவிக்க முடியுமா? இப்படி எல்லாம் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலத்தில்தான் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட விமானக்குண்டு வீச்சினால் வீடு இழந்து கோயிலில் அகதியாக இருக்க நேர்ந்ததை நினைக்க இப்பொழுதும் கவலையாகவும் பயமாகவும் இருப்பதை அநுபவித்தான். கோயிலில் பசி, பட்டினியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பொழுது முன்பின் தெரியாத ஒருவர், அவரும் அங்கு அகதியாக இருக்க வந்தவர், "தம்பி! இனிமேல் தொடர்ந்து இந்தக் கோயிலில் இருந்தால் பட்டினியால் இறக்கவேண்டியதுதான். நானும் பிள்ளைகளும் இன்று கார் ஒன்றில் மட்டுவி லுக்குப் போகப் போகின்றோம். நீங்களும் எங்களுடன் வருகிறீர்களா?" என்று கேட்டுக் கூட்டிப் போனதால் உயிர் தப்பினார்கள். அவருடன் மட்டுவிலில் இருக்கும் பொழுது ஒரு நாள், இவ்வளவு கஷ்டப்பட்டு இனிமேலும் உயிர் வாழவேண்டுமா என்று மனம் விரக்தியுற்றுத் தற்கொலை முடிவுக்கும் போய் விட்டான். அந்தப் பெரியவர்தான் அவனது மனதை உணர்ந்து பல ஆறுதல் வார்த்தைகள் கூறி, தன்னம்பிக்கையை அவனுக்கு ஊட்டியவர். வெளிநாட் டிற்குப் போகும் எண்ணத்தையும் அவனுக்கு ஏற்படுத்தியவர் அவர்தான்.

அதன்பிறகுதான் அவனது தாயின் தாலிக்கொடியை விற்று, பணம் புரட்டி வெளிநாட்டிற்கும் அவன் புறப்பட்டான். இன்று வெளிநாட்டில் பணக்காரன் என்ற தகுதியிலும் இருக்கின்றான். இதற்கெல்லாம் அந்தப் பெரியவர் அன்று காலத்தினால் செய்த அந்த உதவிதான் காரணம். அவர் இல்லாவிட்டால் அன்று அந்தக் கோயிலில் பட்டினியால் அல்லது தற்கொலை முயற்சியினால் செத்திருப்பேன். இதற்கெல்லாம் நன்றியை அவருக்கு எப்படியாவது தெரிவிக்கவேண்டும் என்று மனதில் உறுதி எடுத்துக்கொண்டு அன்றிரவு நிம்மதியாக நித்திரை கொண்டான்.

அடுத்த நாள் தாயிடம் முன்பு நடந்ததைப்பற்றி விபரம் கூறி அவரது விலாசம் தெரியுமா? என்று கேட்டான். தாங்கள் யாழ்ப்பாணத்தைவிட்டுக் கொழும்புக்கு வந்து ஏழு வருடங்களாகிவிட்டதால் அவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்களோ என்று கூறி, அது ஒரு பெரிய விசயம் இல்லை என்று தாயும் தந்தையும் அலட்சியப்படுத்தினர்.

அவன் இலங்கை வந்து ஒரு கிழமையும் சென்றுவிட்டது. தாய் தந்தையர் அவனுக்குப் பெண் பார்ப்பதில் மும்முரமாக இருந்தனர். நிம்மதி யிழந்து அன்று வெள்ளவத்தைப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றிருந் தான். அந்தப் பெரியவரைச் சந்தித்து அவருக்கு ஏதாவது உதவிகள் செய்ய முடியவில்லையே, அவருக்கும் இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குத் திருமணம் முடியாவிட்டால், அவர்களில் ஒருத்தியைத் திருமணம் செய்யலாமே என்று நினைத்தபடி மனம் உருகிக் கடவுளிடம் வேண்டினான்.

கோயிலைவிட்டு வெளியில் வந்தவன் அண்மையில் இருக்கும் கிறீன்லன்ட்ஸில் தோசை சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்தில் அங்கு சென்றான். தோசைக்குச் சொல்லிவிட்டுக் காத்து இருக்கும் பொழுது சுற்றுமுற்றும் பார்த்தான். அப்பொழுது பக்கத்து மேசையில் இருந்த பெரியவரும் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

ரகுவிற்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. தான் யாரைச் சந்திக்கவேண்டும் என்று நினைத்திருந்தானோ அந்தப் பெரியவர்தான் அங்கு இருந்து அவனையே பார்த்தபடி இருந்தார். ரகு அவர் அருகில் சென்று அறிமுகப்படுத்திக்கொண்டான். அவரும் அவனைத் தெரிந்துகொண்டு அன்புடன் கதைத்தார். அந்தப் பெரியவர் தான் கொழும்பிற்கு வந்து மூன்று மாதங்கள் என்றும் தனது மகளிற்குத் திருமணம் பேசி முற்றாகியதால் அவளை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக இங்கு வந்ததாகவும் கூறினார். அவரைத் தன்வீட்டிற்கு வரும்படி அழைத்தான். அடுத்த நாள் வருவதாகச் சொன்னவர் ஒரு கிழமையாகியும் வரவில்லை.

அவரைத் தேடி ரகு அவரது இடத்திற்குச் சென்றான். அவரது மகளுக்கு மணம் பேசிய வெளிநாட்டு மாப்பிள்ளை கார் விபத்தொன்றில் இறந்துவிட்டதாக அறிவித்ததால் தனது மகளின் கதி இப்படியாகிவிட்டதே என்று கவலைப்பட்டுக் கதறி அழுதார் அவர். ரகு அவருக்கு ஆறுதல் கூறினான். அவரை வெளியில் அழைத்துச் சென்று தனது மனவிருப்பத்தைச் சொல்லி, கடவுள் ஒரு வழியில்லாவிட்டால் வேறு ஒரு வழியைக்காட்டுவார் என்று தேறுதல் சொல்லி, உங்கள் மகள் சம்மதித்தால் அவளை, தானே மணம் முடிப்பதாக வாக்குறுதி கொடுத்தான். அவரது உதவியால்தான் இன்று இந்த நிலைக்குத் தான் வந்ததால், அவருக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்துச் சந்தோசம் அடைந்தான். தாய் தந்தையரின் சம்மதத்துடன் அந்தப் பெண்ணையே மணம் முடித்தான். இன்று தனது புது மனைவியுடன் நோர்வேக்குச் செல்வதற்காக விமானத்தை நோக்கி ரகு சென்றுகொண்டிருக்கின்றான். அவனது மனம் சந்தோசத்தாலும் நிம்மதியாலும் நிரம்பியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் குற்றம்

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட மாறன் - கமலி தம்பதியினரின் ஒரே மகன்தான் ஷியாம். அவன் சிறுவயதில் சுறுசுறுப்பான வனாகவும், பெரும் புத்திசாலியாகவும் இருந்தான். எந்தப் பொருளைப் பார்த் தாலும் அதைக் கழற்றிப் பூட்டி விளையாடுவான். வளர்ந்து பெரிய இன்ஜினி யராக வருவான் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள், ஆனால் நடந்தது.... ?

ஷியாமின் அப்பா மாறனுக்கு அமெரிக்காவில் வேலை வாய்ப்புத் தேடிவரவே, அவர்களது முழுக்குடும்பமும் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தது. அங்கு சென்ற ஆரம்பத்தில் ஷியாம் ஒழுங்கான பிள்ளை யாகப் பாடசாலைக்குச் சென்று நன்றாகப் படித்துவந்தான். நாட்கள் செல்லச் செல்ல ஷியாமும் வளர்ந்துவந்தான். அத்துடன் அந்த நாட்டுப் பழக்க வழக் கங்களையும் பழகிக்கொண்டான். வெளிநாட்டவரின் நல்ல பழக்கங்களைப் பழகியிருக்கவில்லை. இளம் பருவத்துக்குரிய துடிப்பில் அந்த நாட்டு இளஞ் சமுதாயம் மனம் போனபடி வாழ்வதைப்போல் வாழத் தொடங்கினான். ஒன்றி லிருந்து ஒன்றாகப் பல்வேறு தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையானான்.

தாய் தந்தையரும் வெளிநாட்டு இயந்திர வாழ்க்கையில் பணம் தேடுவதிலேயே குறிக்கோளாக இருந்தார்களே அன்றி, அவனுடன் நேரத்தைச் செலவிட்டு, அன்பு காட்டி நல்ல புத்திமதிகளைக் கூறி அவனை வழிநடத்தத் தவறிவிட்டார்கள்.

ஷியாம் பாடசாலைக்குப் போகாமல் நண்பர்களுடன் சுற்றித் திரிவது பல நாட்களுக்குப் பின்தான் தாய் தந்தையருக்குத் தெரியவந்தது. கண்கெட்டபின் சூரியநமஸ்காரம் செய்வதுபோல் கணவனும் மனைவியும் அதன் பின்தான் தங்கள் பிள்ளையை நினைத்துக் கவலைப்படத் தொடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினார்கள். இருவருக்கும் அடிக்கடி குடும்பத்தில் வாக்குவாதமும், பிரச்சினையும் ஏற்படத் தொடங்கின. இருந்த மாதிரி எங்கள் நாட்டிலேயே ஊரில் நிம்மதியாக இருந்திருக்கலாம். வெளிநாடு என்று வந்து என்ன சுகத்தைக் கண்டோம்? பணம் சேர்த்ததைத் தவிர வாழ்க்கையில் நிம்மதி யின்றி மகனை நினைத்துக் கவலைப்பட வேண்டியுள்ளதே, என்று நாளும் மனம் வருந்தினார்கள். இனியாவது அவனுக்கு நல்ல வாழ்க்கையை அமைப்போம் என்று நினைத்து அங்கிருந்த அவர்களின் சொத்துக்களை விற்று, இவ்வளவு காலம் சம்பாதித்த பணத்தை எல்லாம் கொண்டு இந்தியாவிலுள்ள சென்னையில் ஒரு பெரிய மாளிகையை விலைக்கு வாங்கி அங்கு குடிபெயர்ந்தார்கள்.

இந்தியாவிற்கு வந்தும் ஷியாமினது நடவடிக்கைகளை ஓரளவுதான் தாய் தந்தையரால் கட்டுப்படுத்த முடிந்தது. சிறுவயதில் அவர்கள் கொடுத்த செல்லத்தினால் இப்பொழுது அவனைக் கண்டிக்க முடியாமல் தவித்தார்கள். படிக்க விருப்பமின்றி இருந்த ஷியாமுக்குத் தொழிற்சாலை வைத்துக் கொடுத்தார்கள். அதனையாவது ஒழுங்காகக் கொண்டு நடத்தியிருக்கலாம். அதனைக் கவனியாது நண்பர்களுடன் சுற்றுவதும் தனது பணக்காரத் தனத்தைக் காட்டுவதற்காக அடிக்கடி பெரிய உணவு விடுதிகளுக்கு நண்பர்களை அழைத்துச் சென்று விருந்து கொடுப்பதுமாகக் காலத்தைக் கழித்து வந்தான்.

திருமணம் செய்து வைத்தாலாவது திருந்தமாட்டானா என்று நினைத்த பெற்றோர் அவனுக்குத் திருமணமும் செய்துவைத்தனர். அப்படியும் அவன் திருந்துவதாக இல்லை. உற்றவர் கவனிக்காத தொழிற்சாலை ஒழுங்காக இயங்குமா? நட்டத்தில் இயங்கியது தொழிற்சாலை. கடன்மேல் கடன் வாங்கி தொழிற்சாலையை நடத்தினான். தந்தையும் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாகிவிட்டார்.

சொத்துக்களை விற்றுக் கடனை அடைத்தார்கள். பெரும் பணக்காரர்களாக இருந்தவர்கள் இன்று நடுவீதிக்கு வந்துவிட்டார்கள். பிறப்பிலே பணக்காரனாக இருந்த ஷியாம் இன்று நடுவீதிக்கு வரக் காரணம் யார்? தாய் தந்தையரின் வளர்ப்பு முறையா? அல்லது ஊழ்வினைப் பயனா?யார் குற்றம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்செய் விருப்பு

சுகுணாவும், ரதியும் நெருங்கிய சிநேகிதிகள். இருவரும் சிறுவயது முதல் ஒன்றாக ஒரே பாடசாலையில் படிக்கிறார்கள். இருவரின் வயதும் 15 ஆகின்றது. இவர்களில் சுகுணா நற்குணமும் நல்ல பழக்க வழக்கமும் உடையவள். ரதி சரியான சுயநலம் பிடித்தவள். ஒருவருக்கும் ஒரு உதவியும் செய்யமாட்டாள். சுகுணா எத்தனையோ முறை அவள் இப்படி இருப்பது நல்லதல்ல என்று சொல்லிப்பார்த்தாள். ஆனால் அவளோ சுகுணாவின் வார்த்தையை அலட்சியப்படுத்திவிடுவாள்.

அன்று அவர்களது தமிழ் ஆசிரியர் அவர்களுக்குப் பாடம் எடுக்கும் போது ஔவையாரைப் பற்றியும் அவர் எழுதிய ஆத்திசூடியினைப் பற்றியும் விளக்கம் கூறிக்கொண்டிருந்தார். "பிள்ளைகளே! நீங்கள் எவ்வளவுதான் படித்தாலும் நல்ல குணம், நல்ல பழக்கவழக்கம் உள்ள பிள்ளைகளாக வளர்வதுதான் முக்கியம். எங்களை நல்வழிப்படுத்த நல்ல நூல்கள் தமிழ் மொழியிலே எழுதப்பட்டிருக்கின்றன. திருக்குறள், ஆத்திசூடி என்பன அவற்றிலே சிலவாகும். அவற்றையெல்லாம் நன்கு கற்று அதன்படி வாழ நீங்கள் பழகிக்கொள்ளவேண்டும்". இவ்வாறு பல உதாரணங்கள் கூறி விளங்கப்படுத்தினார். வகுப்பு முடிந்தபின் ரதி, சுகுணாவிடம் வந்து, "இந்த ஆத்திசூடி, திருக்குறள் எல்லாம் பெரிய திறம் என்று நீ நம்புகின்றாயா? எனக்கு இவர்கள் கூறிய அறிவுரைகளில் நம்பிக்கை இல்லை" என்றாள். "பெரியவர்கள் கூறிய முதுமொழிகளை ஒரு நாளும் தூற்றாதே. திருக்குறள் உலகத்தில் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது தெரியுமா? அதில் பிரயோசனம் இல்லாமலா இப்படிச் செய்திருக்கிறார்கள்? உனக்கு வாழ்க்கையில் இதனை உணரும் சந்தர்ப்பம் வராமலா போகப் போகின்றது. அப்பொழுது உணருவாய்." சுகுணா அவளுக்குப் பதில் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களின்பின் அந்தப் பாடசாலை மாணவர்கள் சுற்றுலா ஒன்றுக் குப் புறப்பட்டார்கள். சுகுணாவும் ரதியும் மிகவும் சந்தோசமாக அந்தச் சுற்று லாவில் பங்கேற்றார்கள். ஆசிரியரிடம் சொல்லிவிட்டு இருவரும் தாய் தந்தை யர் தங்களுக்குத் தந்த பணத்திற்கு உடைகள், மற்றும் ஏதாவது பொருட்கள் வாங்கி வரலாம் என்று அந்த இடத்தில் உள்ள பெரிய நகரத்திற்குத் தனியா கச் சென்றார்கள்.

கடைகளைச் சுற்றிப் பார்க்கும்போது வழியில் ஒரு பிச்சைக்காரப் பெண் குழந்தை "அம்மா சாப்பிட்டு இரண்டு நாளாகுது. கொஞ்சம் தர்மம் பண்ணுங்கள் அம்மா" என்று கைநீட்டிக் கெஞ்சிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்து இரக்கப்பட்ட சுகுணா, பாவம் என்று சொல்லி கையில் இருந்த பணத்தில் கொஞ்சம் சில்லறையை எடுத்துப் போடப்போனாள். "சும்மா சொல்லிப் பிச்சை எடுக்குங்கள். காசை வாங்கிவிட்டு பின் தியேட்டருக்குப் போய் படம்தான் பார்க்குங்கள். இவைகளுக்குப் போயும் போயும் இரங்கு கிறாயே" என்று ரதி அவளைத் தடுத்துப் பேசினாள்.

"அறஞ்செய விரும்பு என்று பெரியவர்கள் சும்மா சொல்லவில்லையடி. இப்படிக் கொஞ்சம் பணம் கொடுப்பதால் நாங்கள் ஒன்றும் குறைந்துவிடமாட் டோம். இந்தப் பிள்ளையைப் பார்த்தால், பசியால் பட்டினி கிடக்கும் பிள்ளை யைப் போல்தான் இருக்கிறது. என்னால் முடிந்த தர்மம் செய்கிறேன். என் னைத் தடுக்காதே! நீ காசு கொடுப்பதும் கொடுக்காததும் உன் விருப்பம்" என்று சொல்லிவிட்டுச் சுகுணா, தான் கையில் எடுத்த காசை அந்தப் பிள்ளைக்குத் தர்மமாகப் போட்டாள். ரதி ஒரு சதமுமே கொடுக்கவில்லை.

இருவரும் அதன் பிறகு உடுப்புகள் வாங்கக் கடை ஒன்றுக்குச் சென் றார்கள். உடுப்புகள் எல்லாம் வாங்கிவிட்டுப் பணம் கொடுப்பதற்காக ரதி தனது கைப்பையைத் திறந்து பணத்தைத் தேடினாள். ஆனால் அதில் அவள் வைத்திருந்த பணத்தைக் காணவில்லை. "வரும்போது பணம் எடுத்து வைத்தேனே. இப்பொழுது எப்படி மாயமாக மறைந்தது? இப்பொழுது எப்படிப் பணம் கொடுப்பது?" கவலைப்பட்டு அழாத குறையாக நின்றாள் ரதி. "வழி யில் யாரும் காசைப் பிக்பாக்கெட் அடித்திருப்பார்கள். இனி என்ன செய்வது. நான் பணம் கொடுக்கின்றேன், கவலைப்படாதே" என்று கூறிவிட்டுச் சுகுணா தனது பணத்தில் இருந்து கடைக்காரனுக்குக் காசைக் கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையைவிட்டு வெளியில் வரும்போது "பார்த்தியா ரதி! வழியில் அந்தப் பிச்சைக்காரப் பிள்ளைக்கு நீ ஒரு சதமும் கொடுக்காமல், என்னையும் கொடுக்கக்கூடாது என்று சொல்லித் தடுத்தாயே! இப்பொழுது பார்த்தாயா? உன்னுடன் வந்த எனது பணம் தொலையவில்லை. உனது பணம் மாத்திரம் எப்படித் தொலைந்தது? நான் செய்த தர்மம் எனது பணத்தைத் தொலையவிடாமல் காப்பாற்றியிருக்கிறது. நீயும் அந்தப் பிள்ளைக்கு இரங்கிப் பிச்சை போட்டிருந்தால் உனது பணமும் தொலை யாமல் இருந்திருக்கும். இப்பொழுதாவது "அறஞ்செய விரும்பு" என ஔவைப்பாட்டி சும்மா சொல்லவில்லை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பாய்." அவளுக்கு அன்புடன் விளங்கப்படுத்தி அறிவுரை கூறினாள் சுகுணா. "நீ சொன்னது சரிதான்! எனக்கும் இது ஒரு நல்ல அநுபவம். இனிமேல் நானும் பெரியவர்கள் கூறியுள்ள அறிவுரைகளைப் படித்து, அதன்மூலம் நல்வழியில் வாழ்க்கையை முன்னேற்றுவேன்" என்று சொல்லி மனதில் உறுதியும் எடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுவது சினம்

அது ஒரு மாணவர் சீர்திருத்தப்பள்ளி. அங்குதான் 14 வயது நிரம்பிய ரகு தன் பெற்றோர்களைப் பிரிந்து, மாதங்கள் இரண்டு முடிவடைந்துள்ள நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றான்.

மதிய உணவை உண்டுவிட்டுத் தன் அறைக்குத் திரும்பிக்கொண்டி ருந்தான் ரகு. "உன் பெற்றோர்கள் வந்திருக்கிறார்கள். உன்னைக் கூட்டி வரும்படி அதிபர் சொல்லுகின்றார்" என்றபடி அங்கு வந்தான் ராம். அதைக் கேட்டதும் அவர்களைப் பார்க்க ஓடிச்சென்றான் ரகு. அவர்களைக் கண்டதும் அழுகை அழுகையாக வந்தது அவனுக்கு.

"அழாதே ரகு! நடந்தது நடந்துமுடிவிட்டது. இன்னும் ஆறு மாதங்கள் பல்லைக் கடித்துக்கொண்டு இங்கிரு. அதன்பிறகு வீட்டிற்கு வரலாம்" ஆறுதல் சொல்லிவிட்டு அவனுக்குப் பிடித்த பலகாரங்களையும் அவன் கேட்டிருந்த இன்னும் சில பொருட்களையும் கொடுத்துவிட்டுச் சிறிது நேரம் கதைத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பினார்கள் அவனது பெற்றோர்கள்.

அறைக்குத் திரும்பிய ரகு, பெற்றோரின் பிரிவை நினைத்து அழுதான். "அம்மா அடிக்கடி சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நடந்திருந்தால் எனக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்குமா?" திரும்பத் திரும்ப மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

நோர்வேயின் ஒரு சிறு கிராமப்பகுதியில் வாழும் ரமணன், சியாமளா தம்பதியரின் ஒரே புதல்வன்தான் ரகு. தாய் தந்தையரின் அளவுக்கு மீறிய செல்லத்தினால், அவன் கண்டிப்பாரற்று, பிடிவாதமும் முன் கோபமும் கொண்டவனாக இருந்தான். பாடசாலையில் படிக்கும் நோர்வேஜியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் ,அவனைப் பார்த்து, நிறவேறுபாடுகாட்டிக் கேலி பண்ணும்போது அவனுக்குத் தாங்கமுடியாத கோபம் வரும். இதற்காகப் பல முறை அவர்க ளுடன் சண்டையிடுவான்.

வீட்டிற்கு வந்து, தாய் தந்தையரிடம் "நீங்கள் இந்த நாட்டிற்கு ஏன் வந்தீர்கள்? வகுப்பில் என்னால் இருந்து படிக்க முடியாமல் இருக்கிறது. என்னை எத்தனை விதமாகக் கேலி பண்ணுகிறார்கள் தெரியுமா? இவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிகளைக் கேட்டபடி, மானம் இழந்து இங்கு வாழவேண்டுமா என்று இருக்கிறது." மனம் வெதும்பித் தாய் தந்தையருடனும் சண்டையிடுவான்.

தாய், அவனிடம் "பொறுமையாக இரு ரகு! என்ன செய்வது! எங்கள் சொந்த நாடாக இருந்தால் நாங்கள் யாரையும் எதிர்த்துக் கேள்வி கேட்டுச் சண்டை பிடிக்கலாம். இங்கு அகதியாக வந்தவர்கள் நாங்கள். இவர்களுடன் சண்டைபிடிக்க முடியுமா? சொல்லு! உன் குணத்தாலும், பழகும் விதத்தாலும்தான் அவர்களை உன்னுடன் நன்கு பழகவைக்கவேண்டும்" இப்படிப் பலவிதமாக அன்புடன் அவனுக்கு அறிவுரை கூறுவாள் தாய்.

தாயின் வார்த்தையை அலட்சியம் செய்துவிடுவான் ரகு. அவனது வயதும் தாய் தந்தையரின் பேச்சை அலட்சியம் செய்யும் வயதுதானே. ஒரு நாள் அவனது வகுப்பு மாணவன் ஒருவனுக்கும் ரகுவிற்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கைகலப்பில் முடிவடைந்தது. முன்கோபக் காரனான ரகு, ஆத்திரம் தாங்காமல் அருகில் இருந்த கதிரையை எடுத்து அந்த நோர்வேஜியப் பிள்ளையின் தலையில் அடித்துவிட்டான். அதனால் அந்தப் பிள்ளையின் தலை உடைந்துவிட்டது. பின்னர் அது பெரிய பிரச்சினையாகி அவனை இங்கிருக்கும் சீர்திருத்தப்பள்ளி ஒன்றில் சில காலம் தங்கிப் படிக்க அனுப்பிவிட்டார்கள்.

இப்பொழுது சீர்திருத்தப்பள்ளியில் இருந்துகொண்டு தனது நிலையையும் பிற்கால வாழ்வையும் நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றான். தாயும் மற்றவர்களும் அவனிடம் எத்தனையோ தரம் "ஆத்திரக் காரனுக்குப் புத்தி குறைவு." அதனால் உனது முன் கோபத்தைத் தவிர்த்துப் பழகு எனப் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கேட்காமல் இருந்துவிட்டேனே! இனிமேலாவது ஆத்திரத்தை அடக்கிப் பழகவேண்டும் எனத் தீர்மானித்தான். அங்கிருந்து வெளியேறும் போது மாற்றமடைந்த ரகுவாகத்தான் வெளியேறவேண்டும் என முடிவெடுத்தான். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுச் சிறிது சிறிதாகத் தன்னை மாற்றப் பழகிக்கொண்டும் வருகின்றான். அவனது இந்த முன்கோபக் குணம்மாறினால், அவனது நிலையும் விரைவில் மாறி, வாழ்வில் சிறந்த நிலையை அடைவான் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் இட்டுண்

அன்று சனிக்கிழமையாதலால் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கடைக்குப் போனேன். சாமான்கள் வாங்கும்போது எனது எட்டு வயது மகன் சுதனுக்கு இனிப்பும் கொஞ்சம் வாங்கிக் கொடுத்தேன். கடையை விட்டு வெளியில் வரும்போது எனக்குத் தெரிந்த தமிழ்க் குடும்பம் ஒன்றைக் கண்டு அவர்களுடன் கதைத்துக்கொண்டு நின்றேன்.

நாங்கள் இங்கு வந்து பதின்மூன்று வருடங்கள் சென்றுவிட்டபோதும், இங்கு ஆண் பெண் இருவரும் வேலைக்குச் செல்வதால் அதிகம் தமிழ் ஆட்களின் வீடுகளுக்குச் சென்று வருவது குறைவு. அதனால் கடையில் தமிழ் ஆட்களைக் கண்டதும் சந்தோசத்தில் ஊர்ப்புதினங்கள் கதைத்தேன்.

திடீரென்று இரு பிள்ளைகள் சண்டையிடும் சத்தம் கேட்டுக் கதையைவிட்டுத் திரும்பிப்பார்த்தேன். நான் வாங்கிக் கொடுத்த இனிப்பை மகன் சுதன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, நான் கதைத்துக் கொண்டிருந்த பெண்ணின் மகன் தனக்கும் இனிப்புத் தரும்படி சுதனிடம் கேட்டிருக்கிறான். சுதன் தரமுடியாது என்று மறுக்க இருவருக்கும் இடையில் சிறு சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. எனக்கோ வெட்கமாகிப்போய்விட்டது. "சுதன்! இப்படிச் சின்னப்பிள்ளைகள் பக்கத்தில் பார்த்துக்கொண்டிருக்கும் போது நீர் மட்டும் இப்படிச் சாப்பிடக்கூடாது. எல்லோருக்கும் கொடுத்துத் தான் சாப்பிடவேண்டும்." இப்படிச்சொல்லி அவனிடம் இருந்த இனிப்பில் சில வற்றை வாங்கி அந்தப் பிள்ளைக்கும் கொடுத்தேன். "இங்கு நோர்வேப் பிள் ளைகள்,தாங்கள் எவ்வளவு இனிப்பு வைத்திருந்தாலும் மற்றவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் தாங்கள் மாத்திரம்தான் சாப்பிடுவார்கள். ஏன் நாங்கள் மாத்திரம் மற்றவர்களுக்குக் கொடுத்துச் சாப்பிடவேண்டும்?" என்று கேட்டான் மகன் சுதன். "எல்லாம் வீட்டில் வந்து விளக்கம் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தப்பெண்ணிடமும் விடைபெற்று வீடு திரும்பினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்ததும் மகன் திரும்பவும் என்னைப் பிடித்துக்கொண்டான். "அந்தப் பிள்ளை என்னிடம் இனிப்புக் கேட்டது பிச்சை எடுப்பது போல இழிவான செயல்தானே அம்மா? நீங்களும் இதைப்பற்றி என்னவோ சொல் கிறேன் என்றீர்களே. என்ன அது? உடனே சொல்லுங்கள்" என்று கேட்டான் சுதன்.

"பிச்சை எடுப்பது இழிவான செயல்தான். ஆனால் பிச்சை கேட்ட வனுக்குக் கொடுக்காமல் உண்பது அதிலும் இழிவான செயல். உனக்கு ஔவைப் பாட்டியைத் தெரியுமா? அவர் பெருந் தமிழ்ப் புலவர். "ஐயம் இட்டு உண்" என்று ஆத்திசூடியிலே சொல்லியிருக்கிறார். பசித்தவர்களுக்குக் கொடுத்துப் புசி என்பது இதன் பொருள். அதன்படி கை நீட்டிய அந்தப் பிள்ளைக்கு நீ இனிப்புக் கொடுத்திருக்கவேண்டும். இங்கு வாழும் நோர்வேப் பிள்ளைகளின் கலாசாரத்தில் இந்தப் பழக்கம் எல்லாம் இல்லாமல் இருக்க லாம். அதனால்தான் அவர்கள் அப்படி மற்றவர்களுக்குக் கொடுத்துச் சாப் பிடும் எண்ணம் இல்லாமல் இருக்கிறார்கள். நாங்கள் நல்ல பழக்கங்களைச் சிறுவயதில் பழகிக்கொள்ளவேண்டும்". ஆறுதலாக மகனுக்கு விளக்கம் கொடுத்தேன். "சரி அம்மா! நீங்கள் சொல்கிறபடி இனிமேல் நடக்கிறேன்." என்று சொன்னான் சுதன்.

நாங்கள் இலங்கையில் வாழும்போது, வீட்டில் இருந்த அம்மம்மா, பாட்டா போன்ற மூத்தோர் எங்களுக்கு மகாபாரதம், இராமாயணம் போன்ற எத்தனை அறிவுரைக் கதைகளைச் சொல்லி நல்ல பழக்க வழக்கங்களை எங்களுக்குப் பழக்கினார்கள். இங்கு எங்கள் பிள்ளைகளுக்கு இவற்றைச் சொல்லிக் கொடுப்பதற்குப் பிள்ளைகளுடன் வயது சென்ற பெரியவர்கள் இல்லை. நாங்களும் உழைப்பதற்காக வேலைக்குச் செல்வது, பின் வீடு வந்ததும் வீட்டு வேலை என்று ஒரே இயந்திர வாழ்க்கை வாழ்வதால் பிள்ளை களுடன் இருந்து ஆறுதலாகக் கதைத்து இவற்றைச் சொல்லிக் கொடுப்பது மில்லை. அப்படி நேரம் கிடைக்கும் பொழுதும் தமிழ்த் தொலைக்காட்சி இப்பொழுது வீடுகளில் இருப்பதால் தொடர் நாடகங்களும் படங்களும் என்று பார்ப்பதிலேயே ஓய்வு நேரத்தைச் செலவிடுகின்றோம். அதனால் பிள்ளை களின் பழக்க வழக்கத்திற்கு என்னைப் போன்ற பெற்றோர்களேதான் முழுக் காரணமும் என்று நான் நினைக்கின்றேன். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org